பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 24 வெள்ளிக்கிழமை 08.01.2021 கதிர் 64

**இனி இது இரகசியம் அல்ல!**

ஒரே விடயத்தைப் பலர் பார்த்தாலும் ஒவ்வோருவரும் தத்தமக்கு ஏற்றபடிதான் அது குறித்து விமர்சிப்பர். பிரமுகர்கள் சந்திப்புப் பற்றிய அறிக்கைகளும் அப்படித்தான்.

இரு தரப்புகளும் சேர்ந்து கூட்டறிக்கை என்றால் பக்கம்02 »

# புதிய அரசமைப்புக்கான யோசனையை டில்லியிடமும் கூட்டமைப்பு சமர்ப்பிப்பு



## கொழும்பில் வைத்து ஜெய்சங்கரிடம் நேரில் கையளித்தார் இரா.சம்பந்தன்

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அண்மையில் சமர்ப்பித்திருந்த யோசனைத் திட்ட வரைவு, இந்தியாவிடமும் கையளிக்கப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. இந்த வரைவைக் கையளித்தார். பக்கம் 02 »

## பிணை அனுமதி பெற ஆவண செய்துதவுமாறு கோரி அரசியல் கைதி ஒருவர் உண்ணாவிரதப் போராட்டம்!

(எஸ்.நிதர்ஷன்)

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதியான கனகசபை தேவதாசன் (வயது 64) தனக்குப் பிணை அனுமதி பெற ஆவண செய்துதவுமாறு கோரி நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தனதுமேன்முறையீட்டுவழக்குகள் தொடர்பாகவும், தனது உடல் நிலை தொடர்பாகவும் குறிப்பிட்டு கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளருக்குக் கடிதம் மூலம் அவர் தெரியப்படுத்தியிருந்தார்.

நான் நிரபராதி பக்கம் 11 »

## வடக்கில் நேற்று 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் நேற்று 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் இருவர் மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் எனவும், 7 பேர் பூநகரியைச் சேர்ந்தவர்கள் எனவும், 2 பேர் மருதங்கேணியைச் சேர்ந்தவர்கள் எனவும், ஒருவர் மாத்தளையைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் எனவும் அவர் கூறினார்.

யாழ்.பல்கலைக் பக்கம் 11 »

## புத்தக வெளியீட்டைத் தடுக்க முயன்ற புலனாய்வுத் துறை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.08

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் நேற்று இடம்பெற்ற கலாநிதி ஞானசீலன் ஜெயசீலனின் 'தேசிய மோதலும் சர்வதேச தலையீடும்: ஓர் ஊடக சொற்பொழிவு' என்ற நூல் வெளியீடு புலனாய்வுத் துறையினால் தடுக்கப்பட்டபோதும் நீண்ட முயற்சியின் பின்னர் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டதாக துணைவேந்தர் பக்கம் 11 »

## தமிழருக்கு நியாயம் கிடைக்க வேண்டும்!

### அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை எனக் கூட்டமைப்பிடம் ஜெய்சங்கர் உறுதி

இலங்கைத் தமிழர்களுக்கு நீதி - நியாயம் கிடைக்க வேண்டும். அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கத்துடன் நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. இந்த நிலைப்பாட்டில் மாற்றம் எதையும் பக்கம் 02 »

## கொரோனாத் தொற்றுக்கு நேற்றும் 532 பேர் இலக்கு!

இலங்கையில் நேற்றும் 532 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பக்கம் 02 »

## கொரோனா காவு 222

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர். பக்கம் 02 »

## யாழ்.பல்கலை மருத்துவபீட மாணவனுக்குக் கொரோனா

### 6 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண பக்கம் 02 »

## சாரயம் என்று நினைத்து ரின்னரைப் பருகியவர் சாவு

நாவற்குழி 300 வீட்டுத்திட்ட பகுதியை சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜனாதீபன் (வயது36) என்பவர், மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவர் மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு வீட்டுக்கு வந்தவர், பக்கம் 02 »

## இலங்கையின் முன்னாள் விமானப் படைத் தளபதியை தனது நாட்டுக்கான தூதுவராகக் கனடா நாடு ஏற்பதா?

### அங்குள்ள செயற்பட்டுக்குழு கனேடியப் பிரதமரிடம் ஆட்சேபம்

போர்க் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஒரு நபரை தமது நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக ஏற்க வேண்டாம் என உள்ளூர் செயற்பாட்டுக் குழுவொன்று கனேடிய பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளது.

அந்த வகையில், ஸ்ரீலங்கா விமானப் படையின் முன்னாள் தளபதி எயார் சீவ் மார்ஷல் சுமங்கல டயஸை ஏற்புடையவர் அல்லர் என அறிவித்து அவரது நியமனத்தை மறுக்க தமிழ் பக்கம் 02 »





## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுவாக ஒன்று வரும். இரு தரப்புகளும் தனித்தனியாக வெவ்வேறு அறிக்கைகள் என்றால் தமக்கேற்றவாறு ஆவர்த்தனம் வாசிப்பார்கள்.

இந்திய வெளியுறவு அமைச்சரின் கொழும்பு விஜயத்தின் போதும் அதுதான் நடந்தது.

இந்த விஜய சமயம் முக்கியமாகக் கவனிப்புக்குள்ளான விடயங்கள் இரண்டு.

ஒன்று - கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவது பற்றியது.

அடுத்தது - மாகாணசபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தெற்கில் வலுவடைந்து வரும் நிலையில் அந்த முறைமைக்கு வழிசெய்த 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் எதிர்காலம்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் இரண்டு தரப்புகளினாலும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

இந்திய வெளிவிவகார அமைச்சருடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்திய பேச்சுகளின் போது கொழும்பு துறைமுக விவகாரமும் ஆராயப்பட்டது என்கின்றது ஜனாதிபதி செயலக செய்திக்குறிப்பு. ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சரின் குறிப்பில் அது பற்றிய பேச்சே இல்லை.

அதே நேரம் இந்திய வெளிவிவகார அமைச்சரின் செய்திக் குறிப்பில் தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்வதில் இருந்து அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் உள்ளடங்கலாக இலங்கை அளித்த அதிகாரப் பகிர்வு வாக்குறுதிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதி செயலக அறிக்கையில் அவை எவை பற்றியும் பேசப்பட்டதாக எந்த அசுமாத்தமும் இல்லை.

இது ஏன் என்று புரியவில்லை.

கொழும்பின் மூத்த செய்தி விமர்சகர் ஒருவர் இன்னொரு தகவலையும் சொன்னார்.

*"கொழும்பு கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க மாட்டோம் என்ற கருத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் விடுத்த அறிவிப்பை அப்படியே விழுங்கிக் கொள்ளாதீர்கள். எந்த நாட்டுக்கும் துறைமுகத்தில் ஓர் அங்குலத்தையும் விற்கமாட்டோம் என்றுதான் அவர் கூறியிருக்கின்றார். இந்தியாவின் பாவனைக்கும், நிர்வகிப்புக்கும் அதை வழங்கமாட்டோம் என்று அது அர்த்தப்படாது."* - என்றார் அவர்.

நேற்று முன்தினம் இரவு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இரவு 6.30 மணி முதல் இரவு 10.30 மணி வரை செலவிட்டிருக்கின்றார் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்.

பிரதமருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சருக்கும் பதினைந்து நிமிட நேரமே உத்தியாகபூர்வ பேச்சு நடைபெற்றது.

பின்னர், பிரதமரின் பிள்ளைகளான அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பிரதமரின் பணியாள் தொகுதியின் பிரதானி யோஷித ராஜபக்ஷ மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன் நீண்ட நேரம் உரையாடி, இரவு விருந்துண்டார் அவர்.

அந்தச் சந்திப்புக் குறித்து கொழும்பு சிங்கள ஊடக நண்பர் ஒருவர் ஒரு குறிப்புச் சொன்னார்.

*"வந்ததோ இந்திய வெளிவிவகார அமைச்சர். அவருடனான தமது சந்திப்பின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தம்முடன் கூட வைத்திருந்தவர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன அல்லர். கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ்தான். அப்படிப் பார்த்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத்தான் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் போலும்."* - என்றார் அவர்.

அது சரி போலத்தான் தெரிகின்றது.

இந்த விஜயத்தின் இடையே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்துப் பேசினார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்.

இலங்கையின் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசும் போது முன்வைக்கப்படாத விடயம் ஒன்றை அவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பின் போது வைத்தார்.

அது, இந்தியாவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக வரும்படி இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவுக்கு இந்திய அரசின் சார்பில் ஓர் அழைப்பை அவர் வழங்கியமை தான்.

எதிர்க்கட்சித் தலைவருக்கான இந்த உத்தியோகபூர்வ அழைப்பு கொழும்பு அரசுக்கு - பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் - கொடுக்கப்பட்ட ஒரு சூசக செய்தி என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

கொழும்புக்கு இது புரிந்தால் சரி.

– மின்னல் –

## இலங்கையின் முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரிமைகள் குழு, கனேடிய அரசுக்கு பரிந்துரை செய்து கடிதம் எழுதியுள்ளது.

போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றில் ஈடுபட்டார் என்று குற்றஞ் சாட்டப்படும் எயார் சீவ் மார்ஷல் சுமங்கல டயஸை கனடா அரசு விரும்பத்தகாத நபராக அறிவித்து தூதுவராக தமது நாட்டுக்கு வருவதற்கு அனுமதி மறுக்க வேண்டும் என்று அந்தக் குழு கோரியுள்ளது.

எயார் மார்ஷல் டயஸ் போர்க் குற்றங்கள் இழைத்ததற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக தமிழ் உரிமைக் குழு கூறுகிறது. அது மாத்திரமின்றி பொதுநலவாய கோட்பாடுகளை மீறினார் எனவும் அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுளது. கனேடிய அரசு எயார் மார்ஷல் டயஸ் வருவதை விரும்பவில்லை, அவர் எமக்கு ஏற்புடையவரல்லர் எனும் செய்தியை ஸ்ரீலங்கா அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என அந்தக் குழு கோரியுள்ளது.

மேலும் அவர் மீது மேலதிகமாக விசாரணை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும், எதிர்காலத்தில் அவர் மீது தடை விதிக்கும் நடவடிக்கை தேவையா என்பதை ஆராய வேண்டும் என்றும் அந்தக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் ஸ்ரீலங்காவின் இராணுவ மற்றும் கடற்படைத் தலைவர்கள் இப்படியான தூதரகங்களுக்கு ஆளாகியிருந்தாலும், விமானப் படைத் தலைவர் ஒருவர் தூதுவராக நியமிக்கப்படுவதற்கு முதல் முறையாக இப்போது எதிர்ப்பு எழுந்துள்ளது.

இராஜாங்க உறவுகள் குறித்த வியன்னா தீர்மானத்திற்கு அமைய, எந்தவொரு நாடும் தமது நாட்டுக்கு தூதுவராக நியமிக்கப்படுபவரை எவ்விதக் காரணமும் கூறாமல் அந்த நபர் 'விரும்பத்தகாதவர்!'எனக் கூறி ஏற்க மறுக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையும் கனடாவும் அந்தத் தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளன. கனடாவின் எதிர்ப்பை இலங்கை ஏற்காமல் எயார் மார்ஷல் டயஸ் கனடா வருவாராயின் அவர் மீது போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் வாய்ப்புள்ளது. செஞ்சோலைத் தாக்குதலில் குறைந்தது 53 சிறுமிகள் கொல்லப்பட்டனர், 120ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

அத்தாக்குதல் நடைபெற்ற போது அந்தப் பகுதிக்கு பொறுப்பான வான் படைத் தலைவராக அவர் செயற்பட்டார் எனத் தமிழ் உரிமைக் குழு குற்றஞ்சாட்டியுள்ளது. அந்த வளாகத்தில் சிறுவர்கள் இருந்திருப்பது அவருக்கு தெரிந்திருக்கலாம், எனினும் அடிப்படையில் பொது மக்கள் இலக்கு ஒன்றின் மீது அளவுக்கு அதிகமான தாக்குதலை மேற்கொண்டமைக்கான நம்பத் தகுந்த காரணங்கள் காணப்படுவதாக கடந்த 2015ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இறுதிக்கட்டப் போரின் போது, போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான 57, 58 மற்றும் 59ஆம் படையணியினருக்கு சிரேஷ்ட அதிகாரி எனும் வகையில் காத்திரமான வான் தாக்குதலுக்கு ஆதரவளித்தார் எனவும் அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இராணுவப் படையின் தளபதியாக இருந்த ஜெனரல் ஜகத் ஜயசூரிய பிரேசில் நாட்டுக்கு தூதுவராக நியமிக்கப்பட்ட போது, அவர் மீது பல மனித உரிமை அமைப்புகள் போர்க் குற்றச் சாட்டுகளை முன்வைத்தன. அவரை நாட்டிலிருந்து வெளியேற்றவும் குரல் எழுப்பப்பட்டது. ஆனால் அது தொடர்பிலான முடிவு வருவதற்கு முன்னர் அவர் நாடு திரும்பும் நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா காவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேருவளைப் பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஆண் ஒருவரும், மீதிரிகம பகுதியைச் சேர்ந்த 53 வயதான ஆண் ஒருவரும், கொழும்பு 14 ஐச் சேர்ந்த 89 வயதான ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 222 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 209 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 43 ஆயிரத்து 30 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்து 780 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 39 ஆயிரத்து 661 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 897 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாத்தளையைச் சேர்ந்த குறித்த மாணவன் கடந்த வாரம் மரணச் சடங்கு ஒன்றுக்காக மாத்தளைக்குச் சென்று திரும்பியிருந்தார் எனத் தெரியவந்துள்ளது.

அவருடைய தாயாருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என மாத்தளை சுகாதாரத் திணைக்களத்தினரால் யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்தினருக்கு நேற்று வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக மாணவனுக்கு உடனே விசேடமாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே அவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் நல்லூரில் வாடகைக்குக் குடியமர்ந்திருந்தார் எனவும், அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் மற்றும் தங்கியிருந்தவர்கள் என 6 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் கேதீஸ்வரன் கூறினார்.

அவர்கள் உணவருந்தச் செல்லும் உணவகம் உடனடியாக மூடப்பட்டு அதனை நிர்வகிப்பவர்களும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தத் தகவல் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்குப் பொதுச் சுகாதார உத்தியோகத்தரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே கேதீஸ்வரன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

## சாரயம் என்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாராய போத்தலை எடுத்து குடித்துள்ளார்.

அவரது வீட்டில் வர்ணப்பூச்சு வேலை நடந்து வருகிறது. இதற்கு பயன்படுத்தும் ரின்னர், சாராயப் போத்தலிற்குள் விட்டு வைக்கப்பட்டிருந்த நிலையில், அது தெரியாமல் சாரயம் என நினைத்து அவர் பருகியுள்ளார்.

ரின்னரை பருகிய பின்னர் படுத்துள்ளார். நீண்டநேரமாகியும் அவர் எழுந்திருக்காததையடுத்து, மயக்கமடைந்த நிலையில் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். எனினும், அவர் உயிரிழந்தார்.

## தமிழருக்கு நியாயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியா ஏற்படுத்தது. இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியாவின் கவனம் தொடர்ந்து இருக்கும்..

- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், கொழும்பில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை இன்று சந்தித்து பேச்சு நடத்தினார். குறித்த சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருமித்த நாட்டுக்குள்தான் தமிழர்கள் தீர்வு கேட்கின்றார்கள். எனவே, அவர்களின் அபிலாஷைகளான நீதி, சமாதானம், சமத்துவம், கௌரவம் உள்ளடங்கலான தீர்வைப் பெற்றுக்கொடுப்பது இலங்கை அரசின் பிரதான கடமை என்பதை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடனான சந்திப்பில் நான் எடுத்துரைத்துள்ளேன்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை நீங்களும் (கூட்டமைப்பும்) வலியுறுத்துங்கள். இல்லையேல் அது இல்லாமல் போய் விடும் ஆபத்து உண்டு.

இந்தியாவினதும் இலங்கையினதும் இணக்கத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். இதை இலங்கை அரசின் கவனத்துக்கொண்டு வந்துள்ளேன்.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்து உதவிகளைச் செய்யும். போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலனில் இந்தியா அதிக சிரத்தை கொண்டுள்ளது - என்றார்.

இந்திய வெளிவிவகார அமைச்சருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

அதேவேளை, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா (இலங்கைத் தமிழரசுக் கட்சி), நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## புதிய அரசமைப்பு...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போது, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதன்போதே தமது யோசனைத் திட்டத்தை ஜெய்சங்கரிடம் சம்பந்தன் கையளித்தார்.

21 பக்கங்களைக் கொண்ட இந்த யோசனைத் திட்ட வரைபில், புதிய அரசமைப்பில் மத்திய மற்றும் பிராந்தியங்களின் ஐக்கியத்தைக் கொண்டதாக அரசு முறைமை அமைய வேண்டும். அதில் ஒரு பிராந்தியமாக தமிழ் பேசும் மக்களின் பிரதான வாழிடமான வடக்கு - கிழக்கு இருத்தல் வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்துக்கு உள்ள சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுமானால் அவர்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் வெளிப்புற சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நினைவுபடுத்துகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# சடலங்களைத் தகனம் செய்தல் வர்த்தமானியை இரத்துச் செய்க!

## அதாவுல்லா எம்.பி. கோரிக்கை



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப் போரை தகனம் செய்யவேண்டுமென வெளியிடப் பட்ட வர்த்தமானி அறிவித்தல் சட்டவிரோதமானது. ஆகையால், அதை இரத்துச் செய்யவேண்டு மென நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த (புதன்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ் லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதா அல்லது புதைப்பதா என்கிற பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனவே, இதை அரசியல் ரீதியாக அணுகாது, நிபுணர்கள் குழுவின் அறிக்கையின்படி இதைக் கையாள வேண்டுமென ஜனாதிபதி, பிரதமர் தீர் மானித்திருந்தனர்.

கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ் லிம் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான வழிகாட்டல்களை நிபுணர் குழு பரிந்துரைத்துள் ளது. இதனை ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி ஆகியோர் ஏற்றுக்கொண்டுள்ளனர். சிங்கள மக் களும் இதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தில் அடக்கம் செய்ய முடியுமென தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், நாடாளுமன்றத்தைக் கூட்டாது, கொரோனா வைரஸால் உயிரிழப்போரை எரிக்க வேண்டுமென வர்த்தமானி அறிவித்தல் வெளி யிடப்பட்டிருந்தமையானது, நாடாளுமன்ற உறுப் பினர்கள் அனைவரையும் ஏமாற்றி மேற்கொள் ளப்பட்டது என்கிற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் சட்டத்துக்கும், நாடாளுமன்ற கலாசாரத்துக்கும் எதிரானது என் பதால், அதனை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

# ஐவருக்குக் கொரோனா தொற்று; எருக்கலம்பிட்டி கிராமம் தனிமை!

மன்னார், ஜன.08

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் யப்பட்ட நிலையில், மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் நேற்றுமுன்தி னம் (புதன்கிழமை) காலை முதல் தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட் டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.விநோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் ஓர் அங்க மாக கடந்த திங்கட்கிழமை மன்னார் எருக்கலம்பிட்டியில் மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது ஒரே குடும் பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த 5 பேரில் 3 மகன்கள் மற்றும் மகளினுடைய கணவர் ஆகிய 4 பேரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கொரோனா தடுப்பு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, மகள் தம்பதெனியாவில் உள்ள கொரோனா தடுப்பு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளார்.

இவர்கள் கடந்த 27ஆம் திகதி திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்தமையால் அந்தத் திருமண வீட்டுக்குச் சென்றவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்டவர்கள் ஆகி யோரின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கை முடிவடையும் வரை மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் என மன் னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரி வித்துள்ளார்.

# ரிஷாத்தின் முன்னாள் கணக்காளர் மனோரஞ்சன் பிணையில் விடுதலை

நாடாளுமன்ற உறுப் பினர் ரிஷாத் பதியுதீனின் முன்னாள் கணக்காளர் அழகரட்னம் மனோரஞ் சன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஒரு லட்சம் ரூபா ரொக் கப்பிணை மற்றும் 10 லட்சம் ரூபா பெறுமதி யான சரீர பிணைகள் இரண்டின் அடிப்படையில் அவரை பிணையில் விடு தலை செய்ய கொழும்பு கோட்டை நீதிவான் பிரி யந்த பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

அத்தோடு, குறித்த வழக்கு மார்ச் மாதம் 27 ஆம் திகதி மேலதிக விசார ணைக்கு உட்படுத்தப்பட வுள்ளதாகவும் அவர் உத் தரவு பிறப்பித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதி தேர்த லின்போது புத்தளத்தில் இருந்து மன்னார் வரையில் இலங்கை பஸ் சேவைக்குச் சொந்தமான பஸ்களில் இடம்பெயர்ந்த வாக்கா ளர்களுக்கு போக்குவரத்து சேவையை வழங்கியதன் மூலம், பொதுச் சொத்துக் களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை மற்றும் தேர்தல் சட்டத்தை மீறி யமை முதலான குற்றச்சாட் டுக்கள் முன்னாள் அமைச் சர் ரிஷாத் பதியுதீன், இடம் பெயர்ந்தோரை மீளக் குடியேற்றும் வேலைத் திட்டத்தின் முன்னாள் கணக்காளர் அழகரட்னம் மனோரஞ்சன் உள்ளிட்ட 3 பேருக்கு எதிராக சுமத் தப்பட்டன.

இதனையடுத்து, அழ கரட்னம் மனோரஞ்சன் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

# இ.தொ.கா. பிரதிநிதிகளை சந்தித்தார் ஜெய்சங்கர்!



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கை தொழிலா ளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்களை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நல்லெண்ண அடிப்படையில் இந்த சந்திப்பு நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

மலையகத்தின் எதிர்கால அபிவி ருத்தி தொடர்பாக இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ் தர்களான இராஜாங்க அமைச்சரும் இ.தொ.கவின் பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் உபதலைவரும் பிரதமரின் இணைப்புச்செயலாளருமான செந் தில் தொண்டமான் மற்றும் இ.தொ.காவின் நிதிச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான ரமேஷ்வரன் ஆகியோர் எடுத்துரைத் தனர்.

இதனையடுத்து இதற்கு தேவையான உதவிகளை வழங்குவதாக இந்திய வெளிவி வகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித் துள்ளார்.

# கிளிநொச்சியில் 3 கோடியே 50 லட்சம் ரூபாவில் விடுதி வசதிகளுடன் ஆயுர்வேத வைத்தியசாலை!

கிளிநொச்சியில் விடுதி வசதிகளுடன் கூடிய விசேட கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று வடக்கு மாகாண நிதி ஒதுக்கீட்டின் 3 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட வுள்ளது.

இந்த வைத்தியசாலை கிளிநொச்சி நகரில் கூட்டுறவு மண்டபத்துக்கு அருகில் ஏ9 வீதியோடு மாவட்ட பயிற்சி வள நிலையம் அமைந்துள்ள வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது.

தற்போது பரந்தன் பிரதேசத்தில் பரந்தன் –பூநகரி வீதியில் ஓர் ஆயுர்வேத வைத்தியசாலை இயங்கி வருகிறது.

# அவசர பொலிஸ் இலக்கத்துக்கு தொடர்பு கொண்ட நபர் கைது!

119 என்ற அவசர பொலிஸ் சேவைக்கு தொடர்பை மேற் கொண்டு போலியான தகவல் களை வழங்கிய குற்றச்சாட் டில் தெஹிவளை பகுதியல் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள் ளார்.

தெஹிவளை கல்தெரா வீதி யில் வசிக்கும் 40 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், கடந்த புதன்கிழமை அவரை கல்கிஸை நீதிவான் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தியபோது நீதிவான் அவரை ஜனவரி 18 ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறும் உத்தர விட்டுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற சம்பவமொன்று தொடர்பில் சந் தேக நபர் கடந்த செவ்வாய்க் கிழமை 119 என்ற பொலிஸ் அவசர எண்ணை தொடர்பு கொண்டு, வேண்டுமென்றே தவறான தகவல்களை வழங் கியதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் நாடு திரும் பிய அவர் ஐக்கிய அமெரிக்க மற்றும் ஈரான் ஆகிய நாடுக ளில் நீண்ட காலம் தங்கியிருந் தமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறெனினும் 119 என்ற பொலிஸ் அவசர சேவை இலக் கத்தைத் தொடர்பு கொண்டு பொலிஸாரை தவறாக வழி நடத்துவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டுள்ள பொலி ஸார், அவ்வாறான சம்பவங்க ளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.




காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ஜெய்சங்கர் உரைத்த செய்தி

இந்திய வெளிவிகார அமைச்சர் ஜெய்சங்கரின் கொழும்பு விஜயம் முடிந்து விட்டது.

கொழும்பில் பல தலைவர்களையும் சந்தித்துப் பேசிய அவர் நீண்ட நேரம் – கூடுதல் காலம் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தான் செலவிட்டிருக்கின்றார்.

தமிழர் தரப்புகளுடன் நடத்திய பேச்சுக்களில் அவர் அதிகம் பிரஸ்தாபித்தது மாகாண சபைத் தேர்தல் விவகாரம்தான்.

இலங்கையில் இப்போது பெரும் அரசியல் சர்ச்சையாகக் கிளம்பியுள்ள மாகாண சபை விடயத்தைத்தான் அவர் கையாண்டிருக்கின்றார்.

இந்தியாவின் வெளிவிகார அமைச்சர் பதவியை ஜெய்சங்கர் ஏற்று சில வருடங்கள்தான். ஆனால் இந்திய வெளிவிகாரத்துறை அவருக்குப் புதியதல்ல. அத்துப்படி. அந்தத் துறையில் சேவைக் கால ராஜதந்திரியாகப் பணியாற்றிப் பழமும் தின்று கொட்டையும் போட்டவர். உலகின் பல நாடுகளிலும் இந்தியத் தூதுவராகப் பணியாற்றிய முன்னணி இராஜதந்திரி. கடைசியாக இந்திய வெளியுறவுத் துறையின் செயலாளராக இருந்து பணி ஓய்வு பெற்றவர். அவரைத் தனது – பொருத்தமான – வெளிவிகார அமைச்சராகத் தேடிப் பிடித்து நியமித்தார் இந்தியப் பிரதமர் மோடி.

இலங்கைப் பிரச்சினை – குறிப்பாக அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபை முறைமை எல்லாம் – அவருக்குப் புதியவையே அல்ல.

13ஆவது திருத்தத்துக்கு வழி செய்த இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபோது அப்போதைய இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற்றுக்கு வலது கரமாகக் செயற்பட்ட தூதரக இளம் அதிகாரி அவர். அந்த ஒப்பந்தமும் அதில் காணப்பட்ட இணக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் ஒவ்வொரு ஷரத்துக்காளாகச் சேர்க்கப்பட்டமையும் ஒவ்வொரு அசைவாக அவருக்குத் தெரியும்.

அந்த ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட முதலாவது வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முதல் அமர்விலிருந்து அது செயலிழக்கும் வரை, இவ்விடயங்களை ஒட்டிய விகாரங்களை இந்தியத் தூதரகத்தில் கையாண்ட அதிகாரிகள் குழுவில் ஜெயங்சங்கரும் ஒருவர்.

1990 முற்பகுதியில் இலங்கையில் இருந்த இந்திய அமைதி காக்கும் படை இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் சமயத்தில் வடக்கு – கிழக்கு மாகாண சபையும் செயலிழந்தது.

அத்தகைய சூழ்நிலையில் திருகோணமலையிலிருந்து அப்போதைய – முதலாவது – வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் புறப்படவிருந்த சமயம், வடக்கு – கிழக்கு மாகாண சபையைக் கலைத்து விடும்படி இலங்கை அரசுக்கு பரிந்துரை வழங்குமாறு கோரும் இந்தியப் பிரதமரின் செய்தியை அவருக்கு எடுத்துச் சென்றவர் தூதரக அதிகாரியான ஜெய்சங்கர் தான்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைக்குமாறு பரிந்துரைக்க மாட்டோம், பதிலாக ஒரு தலைப்பட்சமாகத் தமிழீழப் பிரகடனத்தைச் செய்து விட்டுப் புறப்படுவோம் என்று முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும், ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலதிபர் பத்மநாபவும் இந்தியாவுக்கான செய்தியை ஒப்புவித்தது இதே ஜெய்சங்கரிடம்தான்.

வெளிநாட்டுப் பிரமுகர் ஒருவருக்குரிய பாதுகாப்புடன் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் இலங்கையை விட்டுப் புறப்பட்டுச் சென்று இந்தியாவில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை நேரில் கண்காணித்தவரும் அவரே.

ஆகவே இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் உருவாக்கம், செயல்போக்கு மற்றும் மகாத்மியம் யாவும் நன்கு உணர்ந்த இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரியும் இந்நாள் அரசியல்வாதியும் வெளிவிகார அமைச்சர் ஜெய்சங்கர்தான்.

எனவே இலங்கையில் மாகாண சபை முறையைத் தக்க வைக்க வேண்டியதன் அவசியம் இந்தியத் தரப்பின் இன்றைய அதிகாரபீடத்தில் அவரைத் தவிர வேறு யாருக்கும் அதிகம் புரிந்திருக்க முடியாது.

*"மாகாண சபைத் தேர்தலை நடத்தும்படி வற்புறுத்துங்கள். அது நடத்தப்படாவிட்டால் அந்த முறைமையே இல்லாமல் போய்விடும்"* – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அரசுத் தரப்பில் அவரைச் சந்தித்த தமிழ்ப் பிரதிநிதியான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் மாகாண சபைத் தேர்தல்கள் விரைந்து நடத்தப்பட வேண்டும் என்ற செய்தியை அவர் கூறிச் சென்றிருக்கின்றார்.

கொழும்பில் அவரது மூன்று நாள் பயணத்தை ஒட்டி வெளியான தகவல்களை நோக்குகின்ற போது –

மாகாண சபை முறைமையை ஒழிக்கக் கூடாது, அதற்கான தேர்தல்களை விரைந்து நடத்தப்பட வேண்டும், 13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடுகள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், அதிகாரப் பரவலாக்கல் 13ஐயும் தாண்டி – வாக்குறுதி அளிக்கப்பட்டபடி – '13 பிளஸையும்' நிறைவு செய்வதாக இருக்க வேண்டும் – என்பன போன்ற விடயங்களையே இந்தியப் பிரதமர் மோடியினதும், இந்திய அரசினதும் செய்தியாக அவர் கொழும்புக்கு விட்டுச் சென்றிருக்கின்றார் என்று தெரிகின்றது.

இந்தச் செய்தி ராஜபக்ஷ அரசின் காதில் வீழ்ந்திருக்குமா? காலம்தான் அதற்குப் பதில் கூறவேண்டும்.

# தடுப்பூசியை விரைவில் இலங்கைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குக!

## ஜெய்சங்கரிடம் ரணில் கோரிக்கை



இலங்கைக்கு கூடிய விரைவில் தடுப்பூசியை வழங்க டெல்லி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு, கொவிட் வைரஸ் பரவலால் பிராந்தியத்தின் அனைத்து நாடுகளுமே பாரிய நெருக்கடிகளை எதிர்க்கொண்டுள்ள நிலையில், இலங்கை மற்றும் இந்தியா பொருளாதார ரீதியில் மிக நெருக்கமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு விஜயமேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்திய இல்லத்தில் நேற்று (வியாழக்கிழமை) ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையில் தீவிரமடைந்து வரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த இந்திய ஒத்துழைப்பு இன்றியமையாதது என்பதுடன், கொரோனா தடுப்பூசியை கூடிய விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார். வைரஸ் தொற்றால் இரு நாடுகளுமே எதிர்க்கொண்டுள்ள சவால்கள் தொடர்பாகவும் அந்தப் பேச்சில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் கொவிட் தடுப்பூசியை இலங்கைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைளில் டெல்லி கூடிய கவனம் செலுத்தும் என இதன்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழில் மூடப்பட்ட சந்தைகளை மீளத் திறப்பது சாத்தியமில்லை!

## ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்





யாழ்ப்பாணம், ஜன.08

யாழ். மாவட்டத்தில் தற்போது மூடப்பட்டுள்ள சந்தைகளை தற்போதைய நிலைமையில் மீளத் திறப்பது சாத்தியமற்றது என யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கொரோனா கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் திருமண மண்டபங்களில் திருமண நிகழ்வுகள், பிறந்தநாள் நிகழ்வுகள் நடத்தத் தடை எனினும், 50 பேருக்குட்பட்ட கூட்டங்கள் ஏனைய செயற்பாடுகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும் எனவும் அத்தோடு, ஆலயங்கள் மற்றும் பொது இடங்களிலும் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்றவாறு செயற்படுத்தலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# மர்மமாக உயிரிழந்தவருக்கு தம்புள்ளையில் கொரோனா!

தம்புள்ளையில் உள்ள விடுதியில் கடந்த புதன்கிழமை சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட இரத்தினக்கல் வியாபாரிக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தம்புள்ளை பொலிஸ் பிரிவினர், தம்புள்ளை மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் விடுதியின் உரிமையாளர்கள் என அனைவரும் தற்பொழுது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். 40 வயதுடைய அந்த நபர் தொற்றால் உயிரிழந்துள்ளாரா அல்லது தற்கொலை செய்துகொண்டுள்ளாரா என்பது தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவினால் உயிரிழந்தோரை தகனம் செய்ய நிபுணர்குழு பரிந்துரை!

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை தகனம் செய்ய வேண்டும் என நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதா அல்லது தகனம் செய்வதா என்பது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த அறிக்கை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்து உரையாற்றும்போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தப் பரிந்துரையானது, எந்தவொரு மத அல்லது ஏனைய காரணங்களுக்காக மாற்றப்படாமல் செயற்படுத்தப்படும் எனவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கை பிரதான குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

# தங்க முட்டைபோடும் வாத்தை மாற்றானுக்கு கொடுக்கும் படுமுட்டாள்கள் அல்லர் நாம்!

## துறைமுக கிழக்கு முனையம் தொடர்பில் விமல் விடாப்பிடி



தங்க முட்டை போடும் வாத்தை மாற்றானொருவருக்கு கொடுத்து விடும் அளவிற்கு நாம் பலவீனமானவர்களல்லர். ஆகவே கொழும்புதுறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நிர்வாகத்தை இந்தியாவிற்கோ அல்லது மற்றுமொரு தரப்பிற்கு விட்டுக்கொடுத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கப் போவதுமில்லை என தெரிவித்த அமைச்சர் விமல் வீரவன்ஸ, 51 வீதமான பங்குகளுடன் நிர்வாக மற்றும் தீர்மானமெடுக்கும் அதிகாரங்கள் இலங்கை வசமே இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கோ அல்லது வேறு தரப்பினருக்கோ விற்பனை செய்வதாகவோ அல்லது அவர்களுடன் ஒன்றிணைந்து நிர்வகிப்பதாகவோ இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் எவையும் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. அத்தகைய அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டால் மாத்திரமே, என்ன நடக்கப்போகின்றது என்பதை எம்மால் அறிந்துகொள்ள முடியும்.

இதுபற்றி கடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது துறைமுக அமைச்சரிடம் வினவினேன். அதற்கு, அரச – தனியார் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதாயின் துறைமுகத்தின் 51 சதவீதம் துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமாக இருக்கும் அதேவேளை அதில் பெரும்பான்மை நிர்வாக உரிமையும் உள்ளடங்கும் வகையிலேயே வழங்கப்படும் என்று பதிலளித்தார். ஆகவே இதுவிடயத்தில் எத்தகைய இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்றது என்று அவதானித்து வருகின்றோம். அதன்பின்னரே எமது நிலைப்பாட்டை அறிவிக்கக்கூடியதாக இருக்கும்.– என்றார்.

## வெடிக்காத நிலையில் கைக்குண்டு, ஷெல் மீட்பு!

வவுனியா, கனகராயன்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதிரங்குளம் குளப் பகுதியிலிருந்து ஆர்பீஜி ஷெல் மற்றும் கைக்குண்டு ஒன்று ஆகியன கடந்த புதன்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

இந்த வெடிபொருள்கள் தொடர்பில் இராணுவத்துக்கு தகவல் வழங்கப்பட்டமையையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் ஆர்பீஜி ஷெல் மற்றும் கைக்குண்டை மீட்டுள்ளனர். நீதிமன்றின் அனுமதியுடன் இந்த வெடிபொருள்கள் செயலிழக்கம் செய்யும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.





# வேளாண்மை கால்நடைப்பிரிவு இராணுவத்துக்குள் ஸ்தாபிப்பு!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைத் திட்டத்தின் கீழ் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இராணுவத்தில் விவசாயம் மற்றும் கால்நடை படையணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் விவசாயம் மற்றும் கால் நடை படையணியின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த இராணுவத்தளபதி அங்கு மேலும் கூறுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கை திட்டத்தின் கீழ் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில்ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கையின் விவசாயம் மற்றும் கால் நடை படையணியின் அங்குரார்ப்பண விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



மன்னராட்சி காலத்திலிருந்து விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு இலங்கை என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். இந்த காலப்பகுதியில் விவசாயத்தால் தன்னிறைவு பொருளாதாரத்தைக் கொண்ட நாடாகவும், வெளிநாடுகளிலிருந்து எந்தவோர் உணவு பொருளும் இறக்குமதி செய்யப்படாத நாடாகவும் திகழ்ந்த வரலாறு இலங்கைக்கு உண்டு.

70 ஆண்டு வரலாற்றைக் கொண்ட இலங்கை இராணு வம், நாட்டின் விவசாயத்துறை மேம்பாட்டுக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்புக்களை வழங்கி யுள்ளமை இரகசியமல்ல. இதற் காக விவசாயம் மற்றும் கால்நடைக்கான பணிப்பாளர் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் மூலம் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தற்போது வெற்றிப்பாதையின் முன்னேற்றமடைந்துள்ளன. விவசாயத்தைக் கைவிட்டு மக்கள் வெவ்வேறு துறையைத் தேர்ந்தெடுக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் இத்துறையை வீழ்ச்சியடையாது மேம்படுத்துவது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும்.

அரச திணைக்களங்களின் கீழ் இருந்தும் இது வரையில் உபயோகிக்கப்படாத நிலங்களில் விவசாயத்தை மேம்படுத்தி அந்தத்துறையை மேம்படுத்துவதற்கு இராணுவத்தினரால் பல பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நெல், தேங்காய், மாங்காய், கௌபி, சோளம், கஜு உள்ளிட்ட பயிர் செய்கைகள் இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை தவிர பால், முட்டை மற் றும் யோக்கெட் உற்பத்திகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெங்காய உற்பத்திக்கான பணிகளும் யா எல வில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

30 வருட கால யுத்தத்தின் போது இராணுவம் உள்ளிட்ட முப்படையினரும் பொலிஸா ரும் பயிற்சி நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியேற்பட்டது. இதனால் அரசாங்கத்துக்கு பாரிய செலவுகள் ஏற்பட்டன. எனினும் அந்தச் சந்தர்ப்பத்தில் அவை இராணுவத்தால் உற்பத்தி செய்யப்பட்டன. அதனை இராணுவத்தினரின் தேவைக்காக மாத்திரமன்றி நாட்டு மக்களின் தேவைக்காகவும் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.– என்றார்.

## ‘அரசியல் கைதிகள்’ என்று எவரும் சிறைகளில் இல்லை!

### நீதி அமைச்சர் விளக்கம்



அரசியல் கைதிகள் என எவருமே சிறைகளில் இல்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) வாய்மூலவினாக்கான விடை நேரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக ஆளும் கட்சி உறுப்பினர் சுரேன் ராகவன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் என எவருமே சிறைகளில் இல்லை என்றும், பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தமிழ் கைதிகள் சிலர் உள்ளனர் என்றும், எனினும் எந்தவித வழக்கும் தொடராது நீண்டகாலமாக இவர்களுக்கு பிணை வழங்காது தடுத்து வைக்கவும் முடியாது என்பதை தான் ஏற்றுக்கொள்கிறார் என்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

எனினும் இவர்களை விடுவிப்பது தொடர்பாக அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்க வேண்டும் என்றும், எனினும் இதுவரையில் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இலங்கை இராணுவத்தின் சமிக்ஞை படையணி வரலாற்று நூல் ஜனாதிபதியிடம் கையளிப்பு!

கொழும்பு, ஜன.08

இலங்கை இராணுவத்தின் சமிக்ஞை படையணியின் ‘வரலாற்று நூல்’ நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து பணிக்குழாம் பிரதானியும் படையணி தளபதியுமான மேஜர் ஜெனரல் டி.ஏ.பி. என் தெமடன்பிட்டியவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் சமிக்ஞை படையணி 1943 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19 ஆம் திகதி நிறுவப்பட்டது. தகவல் தொழில்நுட்பம், சமிக்ஞை நடவடிக்கைகள், இணைய நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட படைப்பிரிவின் 77 ஆண்டு கால வரலாறு தொடர்பாக அனைத்துத் தகவல்களும் கொண்ட ஓர் ஆய்வு நூலாக இந்த புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவ அதிகாரியாக நியமிக்கப்பட்டமை, லெப்டினன்ட் ஆக சமிக்ஞை படையணியில் அவர் செய்த சேவை, பாகிஸ்தானில் இளம் சமிக்ஞை அதிகாரி பாடெநெறியை பயின்றமை, யாழ்ப்பாணத்தில் சமிக்ஞை அதிகாரியாகப் பணியாற்றியமை ஆகியவை படையணி வரலாற்றில் அடங்கும்.

பாதுகாப்பு பணிக்குழாம் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, மேஜர் ஜெனரல் டபிள்யூ.பி.ஏ.கே. திலகரத்ன, மேஜர் ஜெனரல் பி.ஏ.ஜே. பீரிஸ் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## விமான சேவைகளை அதிகரிக்க முடிவு!



வெளிநாட்டில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக எதிர்வரும் வாரம் முதல் விமான சேவைகளை அதிகரிக்கவுள்ளதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று (வியாழக்கிழமை) டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் மேலும் தெரிவித்துள்ள அவர், பணம் செலுத்தி தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை எனவும், வருகை தரும் அனைவருக்கும் அரசாங்கத்தால் தனிமைப்படுத்தல் வசதி ஏற்படுத்தி தரப்படும் எனவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில்

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்!

## உறவினர்கள் கண்ணீர் மல்க கோரிக்கை





கொரோனா தொற்றால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் இந்தத் தருணத்திலாவது விடுதலை செய்ய வேண்டும் என கைதிகளின் உறவினர்கள் சர்வமத தலைவர்கள் முன்னிலையில் கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சர்வமத கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை மண்டபத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.

'ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம்' எனும் தொனிப் பொருளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால், இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறை இருட்டில் இருக்கும் எமது உறவுகளைத் தற்கால கொரோனா வைரஸ் தொற்றும் வெகுவாக பாதித்துவரும் நிலையில் கருணை அடிப்படையில் மனிதாபிமானமாக இந்தத் தருணத்திலாவது அவர்களை விடுவிக்க வேண்டுமெனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தில் உள்ள சர்வமத பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் சிறையிலுள்ள எமது உறவுகளை விடுவிக்க மதத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கண்ணீர் மல்க உறவுகள் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு கொரோனாவால் ஆபத்தை எதிர் நோக்கியுள்ள உறவுகளை மனிதாபிமான அடிப் படையில் அரசாங்கம் விடுவிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் மதத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டது.

# வடக்கு மாகாணத்துக்கு பி.சி.ஆர். சோதனை போதுமானதாகவுள்ளது!

## சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு



தற்போதைய நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை வட மாகாணத்துக்கு போதுமானதாகவுள்ளது. தேவையேற்படின் மாத்திரமே அன்டிஜன் பரிசோதனை வடபகுதியில் மேற்கொள்ளப்படும் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் தற்போதைய நிலைமையில் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒரு நாளைக்கு 600 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது. எனவே தற்போதைய நிலையில் வட பகுதியில் அன்டிஜன் பரிசோதனை தேவையற்ற ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற யாழ் மாவட்ட கொரோனா தடுப்பு விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

ஏனைய மாகாணங்களில் குறித்த அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. ஏனெனில் அந்த மாகாணங்களில் எமது மாகாணத்தை போல பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதன் காரணமாக அவர்கள் மேற்கொள்கின்றார்கள்.

அத்துடன் அன்டிஜன் பரிசோதனையில் ஒரு சில நம்பிக்கையில்லா தன்மையும் காணப்படுகின்றது. அன்டிஜன் பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று என காண்பிக்குமாயின் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யும் போது அவருக்கு தொற்று இல்லை எனக் காண்பிக்கும்.

அதே போல் அன்டிஜன் சோதனையின் போது ஒருவருக்கு தொற்று இல்லை என உறுதிப்படுத்தியவரை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தும் போது அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படும்.

எனவே அன்டிஜன் பரிசோதனை என்பது மிகவும் நம்பகரமான சோதனை முறை அல்ல. மேலும் வடக்கு மாகாணத்தில் போதியளவு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதன் காரணமாக நாம் தற்போது அதைப்பற்றி பரிசீலிக்கத் தேவையில்லை.

வெளிமாவட்டங்களில் இருந்து ஆனையிறவு மற்றும் பூநகரிப் பாதை ஊடாக வருவோருக்கு நாம் அதிகாலை வேளைகளில் பி.சி.ஆர். சோதனைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோர் தொற்றாளர்களுடன் நேரடி தொடர்பில் இருந்தோருக்கு நாம் ஒவ்வொரு நாளும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# உக்ரைனில் இருந்து இலங்கைக்கு 183 சுற்றுலா பயணிகள் வருகை!

உக்ரைன் நாட்டில் இருந்து சுற்றுலா பயணிகளுடனான 5 ஆவது விமானம் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

அந்த விமானத்தில் 183 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக அவர்கள் நாட்டுக்குள் அழைத்துவரப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 180 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கைக்கான முதல் உக்ரேனிய பயணிகள் விமானம் டிசெம்பர் 28 ஆம் திகதி மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தது.

அவர்களில் இதுவரையில் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஞ்சி மற்றும் மஞ்சள் செய்கைகள் வெற்றி!

வவுனியா புளியங்குளம் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட முன்மாதிரி இஞ்சி மற்றும் மஞ்சள் செய்கை வெற்றியளித்துள்ள நிலையில் அது தொடர்பான வயல் விழா நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றிருந்தது.

புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த பார்வையை இழந்த தவராசா என்ற விவசாயி கடந்த வருடம் மஞ்சள் மற்றும் இஞ்சி செய்கையில் ஈடுபட்டிருந்தார். தற்போது அது செய்கை பண்ணப்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையில் அறுவடை நிலைக்குத் தயாராகி வருகின்றது.

இந்நிலையில் அது தொடர்பான வயல் விழா நிகழ்வு பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அருந்ததி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை அதிதியாக மாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் மற்றும் உதவி பிரதேச செயலாளர் தர்மேந்திரா, பிரதேசசபை தவிசாளர் ச.தணிகாசலம், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.







# இலத்திரனியல் முறையில் காணி பதிவு செய்யும் முறைமை ஆரம்பித்து வைப்பு

ஜனாதிபதியால் முன்மொழியப்பட்ட மற்றுமொரு சேவையான இலத்திரனியல் முறையில் காணி பதிவு செய்யும் முறைமை கொழும்பில் உள்ள பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மேற்படி புதிய முறைமையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வின்போது உரை நிகழ்த்திய அமைச்சர் சமல் ராஜபக்ஷ –

நாட்டு மக்கள் காணி தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் அவர்களின் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்கும் வகையில் இலத்திரனியல் முறையில் காணி பதிவு செய்யும் முறைமை அமையுமெனத் தெரிவித்தார்.

அத்துடன் பிரச்சினைகளை எதிர்நோக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்க எப்போதும் நாம் முயற்சிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தற்போது மூன்று அலுவலகங்களில் செயற்படுத்தப்படவுள்ளன. இந்தத் திட்டம் அடுத்த ஆறு மாதங்களில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்த பாதுகாப்பு செயலாளர், இந்த ஆண்டு இறுதிக்குள் 45 நில பதிவாளர் அலுவலகங்களில் இந்த முறைமையை




செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

'சுபீட்சத்தின் நோக்கு' எனும் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தை மேற்கோள் காட்டிய அவர், இந்த வகையான திட்டம் தொழில்நுட்பம் மற்றும் மக்களை மையமாகக் கொண்ட சேவைகளின் அடிப்படையில் சமூகத்துக்கு உதவுகிறது என்றும், எனவே, இந்தத் திட்டத்தை வெற்றிபெற அனைவரின் ஆதரவையும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் கொழும்பு மாவட்ட செயலாளர், அமைச்சின் மேலதிக செயலாளர்கள், ஜனாதிபதி செயலணி அதிகாரிகள், பதிவாளர் நாயகம், திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வுனியா வளாகத்தில் நேற்று கலாநிதி. ஞானசீலன் ஜெயசீலனின் தேசிய மோதலும் சர்வதேச தலையீடும்: ஓர் ஊடக சொற்பொழிவு என்ற நூல் வெளியீட்டில் பேசப்பட்ட தலைமை விருந்தினர் உரையின் சுருக்கம்.



டானியல் மெக்கான், மாறியெம் பறல், ஷோன் சவேஜ்

# எம் ஆயுதப் படையினருக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு முன்னுதாரணம்; ‘ஒப்பரேஷன் ப்லேவியஸ்’

சா. இரத்தினஜீவன் எச்.ஹூல்

நான் என் பேச்சை ஆரம்பிக்க முன்பு கலாநிதி ஜெயசீலனிற்கும் பழைய பீடாதிபதி கலாநிதி ச.கிரிஷ்ண குமாருக்கும் எனது நன்றியை கூற வேண்டும். நான் துணை வேந்தர் பதவிக்கு விண்ணப்பித்தபோது இருவரும் இவ்வளாக ஆசிரியர் சங்கத்துடன் என்னை ஆதரித்திருந்தனர். நான் இவ்வளாகம் வவுனியா பல்கலைக்கழகமாக ஆக்கப்பட வேண்டும் என்ற போது வடக்கு,கிழக்கை ஒரு தனிப் பிரதேசமாக்க வேண்டும் என்ற புலிகள் என்னை பிரதேசவாதி என்றனர். பல மிரட்டல்கள் மத்தியிலும் இவ்விருவரும் எனக்குப் பல உதவிகள் புரிந்தனர்

துணைவேந்தருக்கும் நான் கடமைப்பட்டவன். என்மேல் 2010 இல் யாழ் பொறியியல் பீடத்தை ஸ்தாபிக்கும் பொறுப்பு மானியங்கள் ஆணைக்குழுவால் சுமத்தப்பட்டது. அப்போது எனக்கு அலுவலகமாக ஓர் சிறிய தனிமையான இடமே விஞ்ஞான பீடத்தில் ஒதுக்கப்பட்டது. சிறீசற்குணராஜா(தற்போதைய துணை வேந்தர்) உடனடியாக தனது கணிதத் தலைவர் அலுவலகத்தை எனக்கு தந்து எனது பணிக்கு ஒத்துழைத்தார். இதற்கு நான் எப்போதும் நன்றியாய் இருப்பேன்.

இப் புத்தகத்தை விமர்சிப்பது என் கடமை இல்லை. அது கலாநிதி மகின் மெண்டிஸால் செய்யப்பட்டுள்ளது. அதைப்பற்றி நான் கூறவேண்டியது ஒன்றுதான். காலஞ்சென்ற ட்டொரன்ட்ஓ பல்கலைக் கழக ஆங்கிலப் பேராசிரியரும் என் நண்பருமான செல்வா கனகநாயகத்தின் விமர்சனமே. இப் புத்தகமாவது ஒரு நல்லாக ஆராயப்பட்டு எல்லாத் தலைப்புகளும் உள்ளடங்கிய மதிப்பு மிக்க பங்களிப்பே என்பதாகும். கனடாவின் ராஜரீக சமூக அங்கத்தவர் சொன்னதற்கு மேலால் நான் கூறி அலங்கரிக்க வேண்டியதில்லை.

ஜெயசீலனின் போர் மூட்டம் கண்டதையும், பொல்லாப்பில் வாழ்ந்த, இரு தரப்பினரதும் கொடுமையையும், பெரியோர் புத்தி கூறும்போது புத்தியை மறுக்கும் பிடிவாத தனத்தையும் அனுபவத்தையும் வைத்தே இந்த புத்தகத்திற்கு பெயர் வைத்துள்ளார் என நம்புகின்றேன். வெளியுலக தலையீடு இல்லாமல் எங்களிற்கு விமோசனம் இல்லை என்ற நம்பிக்கையை அவரும் கொண்டுள்ளார் என்றும் நான் கணிக்கின்றேன்.

இந்த முகவுரையுடன் எனது பேச்சிற்கு வருகின்றேன். எனது அடிப்படை கூற்று பயங்கரவாதிகளிற்கும் உரிமைகள் உண்டு என்பதே ஆகும். இது எமக்கு

> “இது ஒருவர் எவ்வளவு கெட்டவராகினும் அவருக்கு நீக்க முடியாத உரிமைகள் உண்டு என்பதனை உறுதிப்படுத்துகிறது. இந்த மூவருக்கே இப்படியான பறிக்க முடியாத உரிமைகள் உண்டு என்றால், அவர்களுக்கும் நினைவு கற்கள் நாட்டப்பட்டன என்றால், திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் முள்ளிவாய்காலில் எண்ணற்ற கொலை செய்யப்பட்ட அப்பாவிகளின் உரிமைகள் எங்கே?”

மீண்டும் ஒரு கொடூர காலம். இலங்கை இராணுவத்தின் கை ஓங்குவதனால் சொந்தக்காரரின் இறப்பைக் கூட நினைவு கொள்ள முடியவில்லை. புத்த சமயம் எமக்குள் புகுத்தப்படுகின்றது. கத்தோலிக்க இலங்கை தலைவர், அதிவண. மல்கம் ரஞ்சித்தே நாட்டைப் பற்றிய தீர்மானங்களை புத்த கோட்பாடுகளிற்கு அமைய எடுக்கட்டாம் என்கின்றார். இராணுவக் கொலைகாரர்களிற்கு ஒரு தண்டனையோ வழக்கோ இல்லை.

இவை எல்லாவற்றிற்கும் மாறாகவே ஜிப்ரோல்ட்டரில் ஏற்பட்ட ‘ஒப்பரேன் ப்லேவியஸ்’. இது இங்கிலாந்து, அயர்லாந்து, ஐ.ஆர்.ஏ.(அயலாந்து குடியரசு இராணுவம்) ஆகிய மூன்றையும் சம்பந்தப்பட்டது. இந்தச் சம்பவம், சட்டம் எவ்வளவு மகிமையுடன் ஓங்கப்பட வேண்டும் என்று உதாரணமாக எனக்கு அமைந்தது. இது நான் 2000ஆம் ஆண்டு ஒல்லாந்த அரசின் கிருபையால் பிரான்ஸ் நாட்டில் மனித உரிமைகளைப் பற்றி பயிற்சிக்கப்பட்டபோது அறிய வந்தது. யார் கொல்லப்பட்டாலும் அவர்கள் எங்களிற்கு எவ்வளவு பிடிக்காதவர்களாயினும், சட்டப்படியே நீதி வேண்டும் என்பதே.

இங்கிலாந்திற்கு மேற்கே உள்ள ஒரு தீவு அயர்லாந்து. 5ஆம் நூற்றாண்டில் மதப்போதகராய்திகழ்ந்த பரிசுத்த பட்றிக் அயர்லாந்தை கிறிஸ்தவ நாடாக்கினார். இங்கிலாந்து சக்சன் பாஷை (ஒரு வகை வட ஜேமன் பாஷை) பேசப்பட்டது. அயர்லாந்தில் செல்ட்டிக் என்ற சக்சனிற்கு முன்பான பாஷை பேசப்பட்டது. 1066 இல்லத்தீனை அடிப்படையாகக் கொண்ட நோமன் அரசனால் பிரான்ஸில் இருந்து படை எடுக்கப்பட்டு இங்கிலாந்தின் சக்சன் மக்கள் அடக்கப்பட்டனர். பின்பு 12ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தியர் அயர்லாந்தையும் கைப்பற்றினர்.




அயர்லாந்து
இங்கிலாந்து, வட அயர்லாந்து

1534இல் ஆங்கிலேய அரசன் 8 ஆவது ஹென்றி கத்தோலிக்க திருச்சபையில் இருந்து ஆங்கில திருச்சபையை பிரித்து ஸ்தாபித்தபோது ஐரிஷ் மக்கள் றோமாபுரி கத்தோலிக்கத்திற்கு விசுவாசமாய் இருந்தனர். இதுவே அயர்லாந்து பிரச்சினைக்கு அடிப்படை காரணம். இன்று ஆங்கிலேய திருச்சபையில் இருந்து வந்த தேசிய திருச்சபைகள் யாவும் அங்கிலிக்கன் சபைகள் எனப்படுகின்றன. இவர்கள் தம்மை முற்றாக கத்தோலிக்கர் என்றும் முற்றாக எதிர்ப்பாளர் என்றும் அழைத்துக் கொள்கின்றனர்.

1534 - 1603 காலத்தில் நடுகை என்ற கொள்கையின் கீழ் ஆங்கிலேய முடியானது இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த, ரோமாபுரி கத்தோலிக்கத்திற்கு இணங்காத கிறிஸ்தவர்களை அயர்லாந்தில் குடியமர்த்தினர். இப்படி ஆங்கிலேயர் வெற்றி கண்டபோது இங்கிலாந்து - அயர்லாந்து வேற்றுமை அதாவது றோமன் கத்தோலிக்க - எதிர்ப்பாளர் விவாதம் ஓர் உச்சத்தை அடைந்தது. எதிர்ப்பாளர்களைக் கொண்ட பெரு நகர்கள் அதிகரிக்க ஐரிஷ்காரர் பெரும்பான்மையாக இருந்தும் அயர்லாந்து நாடாளுமன்றில் அவர்கள் சிறுபான்மையாகினர். 85 வீதமான ஐரிஷ்காரர் ஆங்கிலேய கோயில்களிற்கு போக மறுப்பதற்கு தண்டனைகள் விதிக்கப்பட்டும் அவர்கள் போகவில்லை. 1800இல் இரு நாடாளுமன்றங்களாலும் அயர்லாந்து பிரித்தானியாவின் ஒரு பகுதியாக்கப்பட்டது.

முதல் வெள்ளைக்காரர் ஆண்ட இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளிற்கே சுதந்திரம் வந்தது - கனடா 1867, ஆஸ்திரேலியா 1901, தென் ஆபிரிக்கா 1910 இவற்றுடன் அயர்லாந்திற்கும் சுதந்திரம் வந்திருக்க வேண்டும். ஆனால் அது அக் கட்டத்தில் பிரித்தானியாவின் ஒரு பகுதியாய் இருந்ததால் பிரிவு பொருத்தமாய் காணப்படவில்லை.

ஐ.ஆர்.ஏ. சுதந்திரத்திற்கு அழுத்தம் கொடுக்க முதலாம் உலக மகா யுத்தம் நிறைவுபெற, ஆங்கிலேய - ஐரிஷ் ஒப்பந்தத்திற்கு அமைய ஐரிஷ் சுதந்திர நாடு என்பது பிரித்தானியாவில் இருந்து பிரியவிடப்பட்டது. ஆனாலும் எதிர்ப்பாளரின் பெரும்பான்மையை உடைய 6 மாவட்டங்கள் பிரித்தானியாவுடன் இருந்து தம்மை பிரித்துக்கொள்ள மறுத்து தம்மை யூனியனிஸ்ட் என்றும் அல்லது வட அயர்லாந்தினர் என்றும் அழைத்துக் கொள்கின்றனர்.


வட அயலாந்தைச் சேர்ந்த றோமன் கத்தோலிக்கர் வட அயர்லாந்தை எதிர்க்கின்றனர். ஐ.ஆர்.ஏ ஆயுதம் தரிக்காத பொது மக்களிற்கும் எதிராக குண்டுத் தாக்குதலை ஆரம்பித்தது. இதுவே ஒப்பரேன் ப்லேவியசிற்கு பின்னணி. அன்று பிரித்தானிய இராணுவத்தின் விசேட அதிரடிப் பிரிவான எஸ்.ஏ.எஸ். என்பதற்கு ஐ.ஆர்.ஏயின் பொது மக்கள் மத்தியில் குண்டு வெடிக்கத் தயாராகிக் கொண்டிருந்த டானியல் மெக்கான், மாறியெம் பறல், ஷோன் சவேஜ் என்ற மூவரைப் பற்றிய தகவல் கிடைத்தது.

டானியல் மெக்கான், மாறியெம் பறல்,
ஷோன் சவேஜ்

மார்ச் மாதம் 1988க்கு முன்பே பிரித்தானிய, ஸ்பானிய, ஜிப்ரோல்ட்ட அரசாங்கங்களிற்கு இப்படி ஜிப்ரோல்ட்டறில் ஜனத் திரள் கொண்ட கண்ணைக் கவரும் படை இடமாற்ற வைபவத்தில் ஐ.ஆர்.ஏ.ஆனது குண்டு வெடிக்கத் திட்டமிடுவதாக செய்தி கிடைத்தது. பின்பு இம் மூவரும் ஸ்பானியாவிற்கு சென்ற செய்தியும் கிடைத்தது. தொடராக மூவரும் ஜிப்ரோல்ட்டரிற்கு கடந்ததில் இருந்து ஸ்பானிய பொலிஸார் அவர்களைப் பின் தொடர்ந்தனர். ஜிப்ரோல்ட்டரில் குண்டு எந்த நேரமும் வெடித்திடலாம் என்று பொலிஸார் முடிவிற்கு வந்தனர். அதுவும் மார்ச் 8 அன்று வெடிக்கும் என்று ஊகித்தனர். இதனோடு எஸ்.ஏ.எஸ்ஸின் செயற்பாடுகளிற்கு பொறுப்பெடுத்து 4 பேர் கொண்ட ஒரு குழுவை ஜிப்ரோல்ட்டரிற்கு அனுப்பியது. எனினும் ஜிப்ரோல்ட்டரின் எல்லை ரோந்துப் படையினருக்கோ சுங்க அலுவலகத்திற்கோ அறிவிக்கவில்லை. காரணம் பலரிற்கு தெரியப்படுத்த கூடாது, மேலும் ஐ.ஆர்.ஏ. இற்கு சந்தேகம் ஊட்டக் கூடாது என்பதற்காகவே.

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir




# புலரிக்கால நோன்புத் திருவெம்பாவை

வே.வரதசுந்தரம்

## ஈழத்துச் சிதம்பர யாத்திரை – 10



மார்கழித் திங்கள் புலரிப்பொழுதாம் வைகறையில் திருவெம்பாவைப் பாடல்களை இசையுடன் பாடக்கேட்டு இனிய உணர்வுடன், தெய்வ நாட்டத்துடன் துயிலெழுவர் சைவப்பெருமக்கள். திருவெம்பாவை காலத்தில் வைகறையில் துயிலெழுந்து, உரியமலர்களைக் கொய்து, கோயில்களில் திருவெம்பாவைப் பூசைகண்டு இவர்கள் வீடுதிரும்புவர்.

திருவெம்பாவை நோன்புக் காலம்பற்றிக் கூறப்போந்த ஈழத்துச் சிதம்பர புராண உரையாசிரியர் பண்டிதமணி இ.பரமேசுவரியாரின் கருத்தினைக் காண்போம்:-

“ஞாயிறு வடதிசையிற் பயணஞ் செய்யும் ஆறு மாதகாலம் வடபாற்செலவு எனப்படும் உத்தராயணம் என்பர். ஞாயிறு தென்திசையிற் பயணஞ் செய்யும் ஆறுமாத காலம் தென்பாற்செலவு எனப்படும் தெட்சணாயனம் என்பர். வடபாற் செல்லும் காலமாகிய ஆறு மாதங்கள் தேவர்களுக்குப் பகற்காலமாகும். தென்பாற் செல்லும் ஆறுமாதகாலம் தேவர்களுக்குப் புலரிக்காலம். அந்தப் புலரிக்காலத்தில் தேவர்கள் யாவரும் தேவதேவராகிய சிவபெருமானை அருச்சிப்பர்.”

அழகிய பாவைகளை ஆற்றங்கரையில், குளக்கரையில் வைத்து மகளிர் விளையாடும் விளையாட்டு பாவை விளையாட்டாகும். பனிநீர்தோய்தலும், பாவை நீராடலும், சங்ககால மரபாகும். இதுவே பின்னர் மார்கழி நீராடலாயிற்று. சங்ககால மகளிர் பாவை நோன்பு நோற்றதாகச் சங்ககால நூல்கள் பகரும்.

திருவண்ணாமலை வந்த மாணிக்கவாசகர் விடியற் காலையில் பல மகளிர் நீராடச் செல்லத்தும் தோழியர்களைத் துயிலெழச்செய்யும் மரபுகண்டு அவர்கள் தமக்குள் பாடுவதாக இப்பாடல்களை அமைத்தார். மதத்தத்துவச் சிந்தனைகளை அடிப்படையாக வைத்து மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரதமபலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை எனப்படும் ஒன்பது சக்திகள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்புவதாக இப்பாடல்கள் உளவென்பர்.

உயிரைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் உருவகித்து மணிவாசகப் பெருமான் இப்பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் பேசுவது பேரின்பம் பற்றியே. இறைவனோ ஆன்மநாயகன்.



தனிநாயகம் அடிகள்

கன்னிப் பெண்களோ இறைவனை அடைதற்குத் தகுதிபெற்ற பதியினை அடையப் பக்குவம் வாய்ந்த உயிர்கள். உறக்கத்தில் இருத்தல் என்பது ஆணவமலம் இருளில் நாம் சிக்குண்டு கிடத்தல். துயில்நீத்தல் என்பது அம்மலத்தில் இருந்து நாம் ஒழியப் பெறல்.

இதனாலன்றோ, திருவெம்பாவைப் பாடல்களைச் சைவசித்தாந்தத் தலைமைச் சாத்திரம் எனப்படும் சிவஞானபோதத்தின் ஊற்றுக் கண் என்று அறிஞர் துரையரங்கனார் போற்றுவார்.

இன்று தாய்லாந்து என்றழைக்கப்படும் சயாமில் திருவெம்பாவை விழா மார்கழித் திங்களில் நடைபெறுவதாக அந்நாட்டு மன்னன் தன்னிடம் கூறினார் என வேல்ஸ் அறிஞர் குறிப்பிட்டுள்ளார். அந்நாட்டு மன்னனின் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவைப் பாடல்கள் பாடப்பெறுவதாக தனிநாயகம் அடிகளார் கூறுவார்.

திருவெம்பாவைப் பாடல்களைப் படிக்கும் தோறும் பல்வேறு வளர்ச்சிப் படிகளைப் பார்க்கிறோம். திருவெம்பாவைப் பாடல்களின் முற்பகுதியில் துயில் எழுப்பலைத் தொடர்ந்து வருபவை கணவன் குளத்தைப் பற்றிப் பாட, பின்னர் வரும் பாடலில் குளத்தையே அவர்கள் இறைவன் இறைவியாகக் காண்கிறார். ஈற்றில் இப்பாடலில் அனைவரும் பயன்பெற அருளை நாடக் காண்கிறோம். பொதுநலம் இங்கு தொனிக்கிறது.

தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாடுகளைத் திருவெம்பாவைப் பாடல்களில் காண்கிறோம். நகையே அழுகை, இனிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகையென்று அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப. உவகை, பக்தி, பெருமிதம், அச்சம், நகையே எனப் பல மெய்ப்பாடுகளைத் திருவெம்பாவைப் பாடல்களிற் கண்டு, அதனை ஓரங்க நாடகமோ, என்று வியக்கிறோம்.

‘நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பணிப்ப’ எனும்போது அழுகை மெய்ப்பாடுதோன்றும். ‘காதார் குழையாட வண்டின் குழாமாட’ என்பதால் உவகை மெய்ப்பாடு தோன்றும். ‘கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம் உள்நெக்கு நின்றுருக’ என்னும் அடி பக்தி மெய்ப்பாட்டினைச் சுட்டி நிற்கிறது. ‘அத்தன் ஆனந்தன், அமுதன் என்றெள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்’ என்ற அடி பெருமிதம் என்னும் மெய்ப்பாட்டை உண்டாக்கல் கண்டோம். ‘உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் எனறங்கு அப்பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்’ என்பது அச்சம் என்ற மெய்ப்பாட்டைக் குறிக்கிறது. ‘பாசம் பரஞ்சோதிக் கென்பாய், இராப்பகல் இப்போதார் அமளிக்கே’ என்பதில் நகை மெய்ப்பாடு புலப்படுகிறது.

திருவெம்பாவைப் பாடல்களில் நாம்காணும் வினாச்சொற்கள் உயிரூட்டுபவை. ஏதவன் ஊர்? ஏதவன் பேர்? ஆர்அயலார்? எனவரும் வினாச்சொற்கள் நம்முள்ளத்தே சிந்தனையைத் தூண்டுகின்றன.

அவ்வாறே திருவெம்பாவைப் பாடல்களில் நாம் காணும் எதிர்மறைச் சொற்களும் உணர்ச்சிகளைப் பெருக்குபவை. இதோ சில சொற்கள்:-

**‘எம்கொங்கை நின்னன்பர் அல்லாதோர் தோள் சேரற்க’**
**‘எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க’**
**‘எங்கண் மற்றொன்றும் காணற்க’**

திருவடிப்பேறே நமக்குக் கதியென்று கூறும் சைவ சமயன். திருவெம்பாவைப் பாடல்களில் இருபது இடங்களில் திருவடிபற்றிச் சுட்டி அதன்சிறப்பை மணிவாசகர் நமக்கு உணர்த்துவார். மணிவாசகப் பெருமானின் திருவடிபற்றிய கருதுகோள் சிவபுராணத்தில் ஊற்றெடுக்கக் காண்கிறோம். அகவல்களில் அக்கருத்து கிளையோச்சுகிறது. திருச்சதகப் பாடல்களில் ஆழச் செல்லும் திருவடிப் பேறு என்னும் சிந்தனை, நீத்தல் விண்ணப்பப் பாடல்களில் வியாபிக்கிறது. திருவெம்பாவை இறுதிப் பாடலில் இது முழுமை பெறுகிறது.

திருவெம்பாவைப் பாடல்களில், சைவசித்தாந்தச் சிந்தனை அடிப்படையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன பேசப்படுகின்றன. இச்சுவடுகளின் அடிப்படையில் உறவுநிலை தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனப்படும். இவ்வாறு திருவெம்பாவை கூறும் வழிமுறைகளைப் பேண நல்வினை, தீவினை இரண்டையும் சமமாக ஏற்கும் இருவினை ஒப்புநிகழும்.

மலங்கள் பக்குவமுற மலபரிபாகம் சித்திக்கும். இதனை நாம் புரிந்து கொள்ள ஒருபாடல்.

**சரியையில் ஆணவம் கால்சரிந்திடும்**
**கிரியையில் அரைமலம் கெடுதியுற்றிடும்**
**மருவு யோகத்தில் முக்கால் மடிந்திடும்**
**விரிசிவஞானத்தில் முற்றும் வீயுமே!**

திருவெம்பாவை இறுதிப் பாடலில் சிவனாரின் ஐந்தொழில் விளக்கத்தைக் காண்கிறோம்.

‘போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்’ இது படைத்தலைக் குறிக்கும்.

‘போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்’ தனு, கரண, புவன, போகம் எனப்படும் உயிர் வாழ்க்கையைக் காத்தலை, இவ்வடி சுட்டும்.

‘போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்’ இவ்வடி அழித்தல் தொழிலைக் குறிக்கும்.

‘போற்றி நான்முகனும் காணாத புண்டரிகம்’ இவ்வடி மறைத்தல் தொழிலை விளக்கும்.

‘போற்றி யாமுய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்’ ஈற்றடியாகிய இதுவோ மறைத்தல் தொழிலை எடுத்துக் கூறும்.

இப்பாடலின்கண் இறைவனது ஐந்தொழில்களின் பொருளையும் பொதிந்து வைத்துள்ளார் மணிவாசகப் பெருமான்.

# வெளிநாடுகளில் சிக்கியவர்களை 4 பிரிவுகளாக அழைக்க ஏற்பாடு!

இலங்கையில் விமான நிலையங்கள் திறக்கப்பட்டதன் பின்னர் 4 பிரிவுகளாக பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையங்கள் மீள திறக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே 4 பிரிவுகளாக பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள், இலங்கை மாணவர்கள், இலங்கை தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இவ்வாறு நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் உப தலைவர் ரஜீவ் சூரிய ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

# மட்டு. ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு!



மட்டக்களப்பு, ஜன.08

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பகுதியில் ஊடகவியலாளர் ஒருவர் ஆர்ப்பாட்டம் ஒன்றில் செய்திசேகரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் கடந்த புதன்கிழமை கரடியனாறு பொலிஸில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை ஏறாவூர் பகுதியில் தொலைதொடர்பு கோபுரம் அமைப்பதற்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றை வீடியோ பதிவு செய்துகொண்டிருந்த தனியார் ஊடகமொன்றில் கடமைபுரியும் ஊடகவியலாளர் குகராசு சுபோஜனை சம்பவ இடத்துக்கு வந்த சிலர் அச்சுறுத்தி வீடியோ எடுக்க விடாது தடுத்தமையுடன் ஊடகவியலாளரைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்த முயற்சி செய்துள்ளனர்.

அத்துடன் அவரிடம் இருந்த வீடியோ கருவியைப் பறிப்பதற்கு பல தடவைகள் முயற்சி செய்துள்ளனர்.

அந்த ஊடகவியலாளரைச் சுற்றிவளைத்த குழுவினரிடம் தன்னை ஊடகவியலாளர் என்று அடையாளப்படுத்திய போது ஊடகவியலாளர் என்றால் எங்களுக்கு என்ன? உடனடியாக வீடியோவை அழிக்குமாறும் கூறி, கடுமையாக எச்சரித்து ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்துவதற்கு முயற்சித்தமையோடு வீடியோக் கருவியைப் பறிப்பதற்கு முயற்சி செய்துள்ளனர்.

இதனால் பாதிப்புக்கு உள்ளான ஊடகவியலாளர் சம்பவ இடத்தில் இருந்து பாதுகாப்பாக அகன்று சென்றுள்ளார்.

மக்கள் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் நோக்கில் குறித்த இடத்திற்கு சென்ற ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான ஊடக அடக்குமுறை இதுவாகும்.

எனவே ஊடகவியலாளரை அச்சுறுத்திய அந்தக் குழுவினரை ஏறாவூர் பொலிஸார் கைது செய்ய வேண்டும் என ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானம்!



புதிய சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சிக்கும் இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில்,வைரஸ்தொற்று அபாயம் அதிகமுள்ள மேல் மாகாணம் தவிர ஏனைய மாகாணங்களில் விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ளவர்களை எந்தக் காரணம் கொண்டும் விளையாட்டுப் போட்டிகளில்பங்குபற்றஅனுமதிக்கவேண்டாம் என்றும் இந்தக் கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தகைய அபாயமுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பிள்ளைகள் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதால் வைரஸ் பரவல் ஏற்பட முடியும் என்றும் இங்கு மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போது சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மெய்வல்லுநர் போட்டிகள், குழு விளையாட்டுக்கள், பாடசாலை 'பிக் மட்ச்' போட்டி போன்றவற்றை நடத்துவது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் நோய் அறிகுறிகளுடைய மற்றும் நோய்வாய்ப்பட்டுள்ள எந்தவொரு பிள்ளைகளையும் விளையாட்டுப் போட்டிகளுக்கு உட்படுத்தக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ளவழிகாட்டல்கள்தேவைக்கேற்ப முழுமைப்படுத்தப்பட்டு முறையாக பாடசாலை விளையாட்டுப் போட்டி ஆரம்பிப்பதிலுள்ள முக்கியத்துவம் தொடர்பாகவும் இதன்போது சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அறநெறி பாடசாலைகள் மீள 17 ஆம் திகதி முதல்

அறநெறிப் பாடசாலைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் அறிநெறி பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் அதிகரித்ததைத் தொடர்ந்து, பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், தனியார் வகுப்புகள் என அனைத்தும் மூடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் தொற்று அதிகரிப்பு புதிதாக 206 பேர் அடையாளம்!

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளம் காணப்பட்ட 522 கொரோனா நோயாளர்களுள், அதிகமானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

அதன்படி 206 பேர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகினர் என கொவிட் - 19 கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டவர்களுள், பொரளையில் 36 பேரும் கொள்ளுப்பிட்டியில் 32 பேரும் நாரஹேன்பிட்டியில் 27 பேரும் தெமட்டகொடையில் 22 பேரும் மட்டக்குளியில் 15 பேரும் அடங்குகின்றனர்.

அத்தோடு, கிருலப்பனையில் 6 பேரும் மருதானையில் 4 பேரும் கொம்பனித்தெரு, ப்ளூமெண்டல், கிராண்ட்பாஸ் முதலான பகுதிகளில் தலா 3 பேரும், புறக்கோட்டையில் 2 பேரும், பம்பலப்பிட்டி மற்றும் கறுவாத்தோட்டம் முதலான பகுதிகளில் தலா ஒவ்வொருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த புதன்கிழமை கம்பஹா மாவட்டத்தில் 97 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 81 பேரும், காலி மாவட்டத்தில் 28 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 27 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 24 பேரும் பதிவாகியுள்ளனர்.

மேலும் கேகாலை மாவட்டத்தில் 13 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 12 பேரும், கண்டி மாவட்டத்தில் 7 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 5 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## சின்ன வெங்காய செய்கையில் இலைச்சுருளல் நோயினை அடையாளம் காணலும் முகாமைத்துவமும்



**பங்கஸ் Fungus - colletorichum**

**விலாங்குப்புழு Nemetrode**

**அறிகுறிகள்**

ஒரு மாதத்தின் பின்னர் காணக்கூடியது.

- தாழ்கள்நலிவடைந்துமெலிந்துதட்டையான தோற்றத்துடன் வளைந்து காணப்படும்.
- முதிர்வடைய முன்னரே மஞ்சளாகி மடியும்.

கட்டுப்பாடு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நோய்அற்ற விதை வெங்காயம் அழுகலற்ற தோட்டத்திலிருந்து பெறல் நோயுள்ள குமிழ்களை பிடுங்கியளித்தல்.

**நீர்ப்பாசனம்**

- நோயுள்ள பாத்தியிலிருந்து நோயற்ற பாத்திக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும்.
- அதிக நீர்ப்பாசனத்தை தவிர்க்கவும்.

**பசளை பாவனை**

அதிக நைதரசன் பாவிப்பதை தவிர்க்கவும்.

**இரசாயன முறை**

- விதை பரிகரணம்.
- 2கிராம்/ 1லீற்றர் - கோமாய் பாவிக்கவும்.
- 30 நிமிடங்கள் ஊறவிட்டு நடவும்.
- இதே அளவு 10ச.மீ.நிலப்பரப்பிற்கு நன்றாக படும்படி ஊற்றவும்.
- டொப்சீன் - 5.5கிராம் / லீற்றர் கரைத்து விசிறவும்.
- தாக்கம் கூடுதலாக இருந்தால் 10 நாள்களுக்கு பின்பும் விசிறவும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

## மீண்டும் மேயர் தெரிவை நடத்துங்கள்!

# ஆனோல்ட்டையும் மணிவண்ணனையும் மேயர் போட்டியில் அனுமதித்தமை தவறு!



### உள்ளூராட்சி ஆணையாளருக்கு தன் சட்டத்தரணி மூலம் கூட்டமைப்பு மாநகரசபை உறுப்பினர் நிபந்தனைக் கடிதம்



**யாழ் மாநகர சபை மேயர் தேர்வில் இமானுவேல் ஆனோல்ட் மற்றும் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரைப் போட்டியிட அனுமதித்தமை சட்டத்தவறு எனத் தெரிவித்து வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.பற்றிக் டிரஞ்சனுக்கு தனது சட்டத்தரணி ஊடாக சட்ட நிபந்தனைக் கடிதம் அனுப்பியுள்ளார் யாழ் மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் முத்து முகம்மது முகம்மது நிபாகர்.**

ஐக்கிய தமிழ் சட்ட நடவடிக்கைக் கவுன்ஸிலின் ஸ்தாபகர் சட்டத்தரணி ஸ்ரனிஸ்லஸ் செலஸ்ரின் ஊடாக இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சட்டத்தினால் 'பதவியை இராஜினாமாச் செய்தவர்' என வகைப்படுத்தப்பட்ட இமானுவேல் ஆனோல்ட்டை மீண்டும் தேர்வுக்கு அனுமதித்தமை சட்டத் தவறு -

மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர சபை உறுப்பினரே மேயர் பதவிக்குப் போட்டியிடலாம் என்றுதான் சட்டம் கூறுகின்றது. பட்டியல் மூலம் மாநகர சபை உறுப்பினர் நியமனம் பெற்ற மணிவண்ணனை இப்பதவித் தேர்வுக்கு அனுமதித்தமையும் சட்டத் தவறு

- என்பன உட்படப் பல விடயங்கள் இந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்படுள்ளன.

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிக்காத மணிவண்ணனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை, அவரது கட்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டமை உட்பட பல விடயங்கள் இக் கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள சட்டத் தவறை ஐந்து நாள்களுக்குள் திருத்தி மீளவும் சட்டத்திற்கு உட்பட்டு, சட்ட ரீதியான முறையில் புதிதக மேயர் தெரிவை நடத்துமாறும் கடிதத்தில் கோரப் பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் இமானுவேல் ஆனோல்ட், மணிவண்ணன், யாழ்.மாநகரசபைஆணையாளர், பிரதி மேயர் து.ஈசன், யாழ் மாநகர சபை செயலாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், வடக்கு ஆளுநர், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன், அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டன.

# வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி கொரோனா அவசர நிலைக்குப் பயன்பாடு

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியை கொரோனா அவசர நிலையத்துக்குப் பயன்படுத்துவதற் காகக் கல்லூரி நிர்வாகத்தினருடன் கலந்துரையாடவுள்ளதாக யாழ். மாவட்ட கொரோனா ஒருங்கிணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற கொரோனா தடுப்பு தொடர்பில் ஆராயும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேஜர் ஜெனரல் செனரத் பண்டார மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ். மாவட்டத்தில் கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது எனவும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொடர்ச்சியாகத் தற்போதுள்ள நிலைமையைப் பேண முடியும் எனவும் மேஜர் ஜெனரல் செனரத் பண்டார மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் தற்போது யாழ் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள சந்தைகளைக் கொரோனா தாக்கம் காரணமாக மீளத் திறப்பது சாத்தியமில்லை எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கச்சதீவு புனித அந்தோ னியார் ஆலய வருடாந்த உற்சவத்தை மத்திய சுகாதார அமைச்சின் அனுமதியுடன் நடத்துவதா? இல்லையா? எனத் தீர்மானிக்கப்போவதாகவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் இலங்கை பக்தர்கள் இந்த உற்சவத்தில் கலந்து கொள்வதால் இதற்கான முடிவை, மத்திய அரசுதான் எடுக்க முடியும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியும் மாவட்ட கொரோனா கட்டுப்பாட்டு அதிகாரியுமான மேஜர் ஜெனரல் செனரத் பண்டார, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங் கோவன், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், இராணுவ உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வெகுவிரைவில் அரசு கவிழும்!

### ஜெய்சங்கருடனான சந்திப்பில் மனோ அணி சுட்டிக்காட்டு



நேற்றைய இலங்கை அரசு செல்வாக்கு இழந்து வருகின்றது. வெகு விரைவில் இனவாதம் இல்லாத இலங்கையை எமது தேசிய கூட்டணி உருவாக்கும்.

- இவ்வாறு இந்தியாவிடம் தெரிவித்துள்ளது தமிழ் முற்போக்குக் கூட்டணி.

மலையகத்தில் கடந்த ஒரு வருடமாக எந்தவொரு அபிவிருத்தியும் வாக்குறுதி, அறிவிப்பு என்ற அளவுகளில் மட்டுமே நிற்கின்றது.

எனவே, இந்தியத் தோட்டத் துறை வீட்டு மற்றும் நலத்திட்டங்கள் உடன் மீள ஆரம்பிக்கப் பட வேண்டும் எனவும் இந்தியாவிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்குப்பயணம்மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூதுக்குழு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவில் பிரதித் தலைவர் வே.இராதா கிருஷ்ணன், பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர் ஆகியோர் இடம் பெற்றனர்.

இதன்போது இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்கள் மற்றும் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கடந்த ஒருவருடமாக மலையகத்தில் எந்தவொரு அபிவிருத்தியும் வாக்குறுதி, அறிவிப்பு என்ற அளவுகளில் மட்டுமே நிற்கின்றது. ஆகவே, இந்திய தோட்டத்துறை வீட்டு மற்றும் நலத்திட்டங்கள் உடன் மீள ஆரம் பிக்கப்பட வேண்டும், இராமேஸ்வரம் - மன்னார், தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவையை ஆரம்பிக்க உங்கள் பக்கத்தில் ஆவன செய்யுங்கள், நோர்வூட் கிளங்கன், நுவரெலியா மருத்துவமனைகளுக்கு பி.சி.ஆர். இயந்திரங்கள் இரண்டு கொடுங்கள், இந்தியா, இலங்கையின் உண்மை நண்பன் என்பதை சிங்கள மக்களுக்கு விளக்கி கூறி எடுத்துக்காட்டுங்கள் - ஆகிய கோரிக்கைகள் தமிழ் முற் போக்குக் கூட்டணியால் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், அரசமைப்பின் 13ஆவது திருத்தம், மாகாண சபைகள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு வரவேற்கத் தக்கது, புதிய அரசமைப்பு வரைவுக் குழுவுக்கு, தமிழ் முற்போக்குக் கூட்டணி யோசனைகளை முன்வைத்துள்ளது, எதிரணியில் இருந்தாலும் நாமே, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பெரிய அரசியல் இயக்கம், நேற்றைய இலங்கை அரசு செல்வாக்கு இழந்து வருகின்றது, வெகு விரைவில் இனவாதம் இல்லாத இலங்கையை எமது தேசிய கூட்டணி உருவாக்கும் ஆகிய கருத்துகளும் தமிழ் முற்போக்குக் கூட்டணியால் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டன.

மேலும், இன்றைய நரேந்திர மோடி அரசே, இலங்கையில் வாழும் எமது மக்கள் மீது அதிக அக்கறை காட்டுகிறது. அதன் பிரதிபலிப்பாகவே, இந்தியாவுக்கு வெளியே மிகப்பெரும் மக்கள் கூட்டத்தை நாம் பிரதமர் மோடிக்காக நோர்வூட்டில் கூட்டினோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் கூறி, பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே மற்றும் தூதரக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துக் கொண்டனர்.

# வெடிபொருள் மீட்பு



முல்லைத்தீவு அளம்பில் வடக்கு 50 ஏக்கர் பகுதியில் தனியார் ஒருவரின் காணியில் போரின் போது புதைக்கப்பட்ட வெடிபொருள்கள் கிடப்பதாக அரச புலனாய்வு பிரிவினருக்கு நேற்றுக் கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த இடத்தில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது கைக்குண்டு ஒன்று மற்றும் மோட்டார்குண்டு ஒன்று, ஆர்.பி.ஜி. குண்டு என்பன மீட்கப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவிற்கு அமைய அவை அழிக்கப்படுவதற்காக முல்லைத்தீவு பொலிஸாரால் சிறப்பு அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# தொண்டமானாறு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன.08

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் மூவர் இலங்கை கடற்படையினரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வடமராட்சியின் தொண்டமானாறு கடற்பரப்பில் ஒரு படகில் மூவரும் கரைக்கு நெருக்கமான பகுதியில் மீன்பிடி நடவடிக்கையால் ஈடுபட்டிருந்த போதே கைதாகியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர் என முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை -

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 26 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்றும் எதிர்வரும் 11ஆம் திகதி மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மீண்டும் தொற்று இல்லை என்றால் 13 ஆம் திகதி அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல்- kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -076 443 8622

# நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் மூன்றில் ஒரு பகுதி தனக்குரியது என்கின்றது வனஜீவராசிகள் திணைக்களம்

(ந.லோகதயாளன்)

நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவின் மூன்றில் ஒரு பகுதி தமக்குரியது என வனஜீவராசிகள் திணைக்களம் தமக்குத் தெரியப்படுத்தாது வர்த்தமானி அறிவித்தல் பிரசுரித்துள்ளதாக நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகியவை சம்பந்தமாக மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும்போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் பிரிவு மொத்தமாக 47.5 சதுரக் கிலோமீற்றர் பரப்பைக் கொண்ட ஓர் நிலப்பரப்பு. இதிலே ஆயிரத்து 864 ஹெக்டேயர் நிலப்பரப்பு தமக்குரித்தானது என 2015ஆம் ஆண்டு யூலை மாதம் வன ஜீவராசிகள் திணைக்களம் வர்த்தமானி வெளியிட்டுள்ளது. ஆனால் தமக்கு உரித்தான நிலம் தொடர்பாக 2015 இல் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு முன்பு இந்த திணைக் களத்தின் அதிகாரிகள் 2014 ஆம் ஆண்டு நெடுந்தீவிற்கு நேரில் வந்து பார்வையிட்டு தமக்கான இடங்களை அடையாளப்படுத்தினர்.

அவ்வாறு அடையாளப்படுத்தியவர்கள் நெடுந்தீவில் 541 ஏக்கர் நிலமே தமக்குரியது எனத் தெரிவித்தனர். இதன் பின்பு 2015இல் வர்த்தமானி பிரசுரிக்கும் போது மக்களிற்குச் சொந்தமான தனியார் நிலம், கோயில்கள், இடுகாடு என அனைத்தையும் உள்ளடக்கியே 1,864 ஹெக்டேயர் நிலத்தை அடையாளப்படுத்தியுள்ளனர். இதனால் அங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அன்றாட வாழ்வில் பெரும் இடர்பாடு நிலவுகின்றது. எனவே உண்மையான 541 ஏக்கர் தவிர்ந்த ஏனைய நிலத்தை மீள விடுவிக்க வேண்டும். - எனக் கோரினார்.

இதற்கு பதிலளித்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரி இதற்கான ஆவணங்களை ஒரு மாத காலத்திற்குள் அனுப்பி வையுங்கள், அதனை மீள வர்த்தமானி பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

## பிணை அனுமதி...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி..)

என நிரூபிக்கும் வாய்ப்பு இல்லாமலும், மேலதிக வைத்திய சிகிச்சை இல்லாமலும் தொடர்ந்தும் சிறைக்குள் அடைபட்டிருப்பதில் அர்த்தமில்லை. இதனால் நான் உடல் உள ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன் எனவும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

மேற்படி கடிதத்துக்கமைய எந்தவித நடவடிக்கையையும் சிறைச்சாலைகள் ஆணையாளர் இதுவரை எடுக்கவில்லை.

இந்நிலையில், குறித்த தமிழ் அரசியல் கைதி தனது கோரிக்கையை வலியுறுத்தி நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை சிறையில் இருந்தவாறு ஆரம்பித்துள்ளார் என அவரது உறவுகளால் குரலற்றவர்களின் குரல் அமைப்புக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## வடக்கில் நேற்று...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி..)

கழக மருத்துவபீடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடங்களில் நேற்று இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இவர்கள் 12 பேரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

பூநகரியைச் சேர்ந்த 11 பேர் வெளிநாடு செல்ல கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளனர். அவர்களிடம் அந்த விடுதியில் வைத்து மாதிரிகள் பெறப்பட்டன. இதனால் அவர்கள் அங்கிருந்து தப்பித்து பூநகரிக்குத் திரும்பி வந்துள்ளனர். இவ்வாறு இவர்கள் தப்பி வந்தமை தொடர்பில் கொழும்பிலிருந்து வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. அத்தோடு மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது தொடர் பிலும் கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுள்ள மூவரையும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைத்த அதிகாரிகள் ஏனைய 8 பேரையும் சுயதனிமைப்படுத்தியிருந்தனர்.

இந்த 8 பேரின் மாதிரிகள் நேற்று யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதில் 7 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மருதங்கேணியில் கொழும்பு சென்று திரும்பிய இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடைய சங்கானையைச் சேர்ந்த ஒருவருக்கும், உடுவிலைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தனது சொந்த ஊரான மாத்தளைக்குச் சென்று வந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஒருவரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## எம் ஆயுதப் படையினருக்கு ......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

மார்ச் 6அன்று இராணுவ இடமாற்ற வைபவத்தை பார்க்க மக்கள் கூடும் இடத்திற்கு அருகாமையில் சவேஜ் தன் காரை நிறுத்துவது அவதானிக்கப்பட்டது. பூட்டப்பட்டிருந்த காரை வெளியில் இருந்து சோதித்த குண்டு அகற்றும் அதிகாரி கார் தொலை இயக்கு குண்டை உடையதாகத் தான் சந்தேகிப்பதாக அறிவித்தார். அதன் பிரகாரம் 4 எஸ்.ஏ.எஸ். காரரிற்கும் ஐ.ஆர்.ஏ. மூவரையும் ஜிப்ரோல்ட்டர் திரும்பும் சமயம் கைது செய்யுமாறு கட்டளையிடப்பட்டது.

எஸ்.ஏ.எஸ். காரர் ஐ.ஆர்.ஏ மூவரையும் நோக்கிச் செல்ல சவேஜ் பிரிந்து சென்றபோது மக்கான், பரல் இருவரும் தேச எல்லைக்கு எதிராக ஓடினர். அதன்போது எஸ்.ஏ.எஸ். நால்வரும் இருவர் இருவராக பிரிந்து ஐ.ஆர்.ஏ. மூவரையும் துரத்தினர். மக்கான், பரல் ஏதோ ஒரு சந்தேக அசைவை செய்ததால் தாம் அவர்களை சுட்டதாக எஸ்.ஏ.எஸ். கூறியது. மக்கான், பரல் பல தடவை சுடப்பட்டிருந்தனர். பரலின் முதுகில் 3 தோட்டாக்களும், முகத்தில் ஒன்றும் இருந்தன.

சவேஜ்ஜை கலைத்த இருவரினதும் படி சவேஜ் தம்மை நோக்கித் திரும்பி தன் கையை தன்னுடைய அங்கியை நோக்கி அசைக்க, மூவரும் மிகப் பயங்கரமானவர்கள், சிறு இடம் கொடுத்தாலே தூரத்தில் இருந்தே குண்டை வெடித்திருப்பார்கள் என்பதால் தமதும் பொது மக்களினதும் பாதுகாப்பிற்காக சுட வேண்டி நேர்ந்தது என்றார்கள்.




டானியல் மெக்கான், மாறியெம் பறல், ஷோன் சவேஜ்: நினைவு கற்கள்

பின்பு 3 ஐ.ஆர்.ஏ. காரர்களும் ஓர் ஆயுதமும் அற்றவர்களாக இருந்ததமையும் சவேஜ் இன் காரில் குண்டு ஏதும் இல்லாததாகவும் காணப்பட்டன. பரலிடம் இருந்த கார் திறப்புகள் குண்டுகள் கொண்ட ஸ்பானியாவில் இருந்த வேறு ஒரு காரினுடையது எனக் கண்டு பிடிக்கப்பட்டது.

ஐ.டீ.வி தொலைக்காட்சி நிறுவனம் காட்டிய சாட்சிகளின் படி ஐ.ஆர்.ஏயினர் ஒரு எச்சரிக்கையும் இன்றி நிலத்தில் முகம்குப்புற கையை நீட்டி இருந்தபோது கொல்லப்பட்டனர் என்று தெரிந்தது. இலங்கையில் எமக்கு வழமையானதே. ஜிப்ரோல்ட்டரில் நடந்த மரண விசாரணையின் போது, சாட்சிகள் கதையை மாற்ற, தீர்ப்பானது சட்டத்திற்கு அமைய மூவரும் கொலை செய்யப்பட்டார்கள் என்பதே. இதுவும் பிந்துனுவேவாவில் இராணுவக்காரன் ஒருவனால் கொல்லப்பட்ட 12 வயது சிறுவனை உச்ச நீதிமன்ற நீதியரசர் பயங்கரவாதி எனத் திட்டியதுபோல் உள்ளது.

ஐ.ஆர்.ஏ. குடும்பத்தினர் ஐரோப்பிய மனித உரிமை மன்றிற்கு முறையீடு செய்ய, பழைய தீர்ப்பு தள்ளப்பட்டு மூவரினதும் உயிரிற்கான உரிமை மீறப்பட்டது என்ற தீர்ப்பை 20 பேர் கொண்ட நீதிபதிகளில் 10 பேர் நிலைநாட்ட 9 பேர் எதிர்த்தனர். ஒருவர் தீர்மானிக்கவில்லை. குறிப்பாக தீர்ப்பின்படி:-

1. மூவரும் பயங்கரவாதிகள் எனத் தெரிந்தும் அதிகாரிகள் பொறுப்பற்று நாட்டு எல்லையிலோ, சுங்கச் சோதனைச் சாவடியிலோ பாதுகாப்பாக கைது செய்யும் சந்தர்ப்பத்தை உபயோகிக்கத் தவறினர். இது அதிகாரிகள் தேவையான பொறுப்பையோ கட்டுப்பாட்டையோ பிரயோகிக்கவில்லை என்பதனை காட்டுகின்றது.

2. கார் குண்டுகளையுடையது என்ற தவறான தகவலை கொடுத்ததால் ஆபத்தான பலப் பாவனையை பாவிப்பது தடுக்க முடியாததாக ஆயிற்று.

3. வேறு விளக்கங்களை, அதாவது ஐ.ஆர்.ஏ. குழு ஜிப்ரோல்ட்டருக்கு குண்டு போட வராமல் முன் கண்காணிப்பிற்கே வந்திருந்தனர் என்பதனை, அதிகாரிகள் கருத்தில்கொள்ளவில்லை. இதுவும் மூவரின் கொலைகளிற்கு தவிர்க்க முடியாத காரணமாக காட்டப்பட்டது.

04. ஆகவே மூவரினதும் உயிரிற்கான உரிமையை பறித்தமைக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இத்தீர்ப்பு இன்னொரு மைல்கல்லைப்போல கவனத்திற்குரியதாக கருதப்படுகின்றது. இது ஒருவர் எவ்வளவு கெட்டவராகினும் அவருக்கு நீக்க முடியாத உரிமைகள் உண்டு என்பதனை உறுதிப்படுத்துகிறது. இந்த மூவருக்கே இப்படியான பறிக்க முடியாத உரிமைகள் உண்டென்றால், அவர்களுக்கும் நினைவு கற்கள் நாட்டப்பட்டன என்றால், திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் முள்ளிவாய்க்காலில் எண்ணற்ற கொலை செய்யப்பட்ட அப்பாவிகளின் உரிமைகள் எங்கே?

இவர்களின் கொலைகளிற்கு காரணமானவர்களைத் தண்டிக்கும் காலம் கடந்து விட்டது. ஐரோப்பிய முன் மாதிரியின்படி நாம் இயங்க வேண்டும். இல்லாது விடில் எம் தலைவர்களிற்கு எதிராக சர்வதேச தலையீடு அத்தியாவசியம்.

## புத்தக வெளியீட்டை...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி..)

சிறிசற்குணராஜா குறிப்பிட்டார்.

இந்த நூல் வெளியீட்டினை புலனாய்வுத் துறையினர் முதலில் தலையிட்டு தடுத்து நிறுத்தினர். இருந்தபோதும் அதில் ஏதும் சட்ட முரணாக இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து அந்தப் புத்தகத்தின் மூல ஆங்கில வடிவம் உடனடியாக மின்னஞ்சல் மூலம் புலனாய்வுத் துறையினருக்கு காலை 9 மணிக்கு முன்பு அனுப்பிவைக்கப்பட்டது. அதனை நன்கு படித்தறிந்த புலனாய்வுத் துறையினர் 12 மணி அளவில் தொடர்புகொண்டு அதனை நடாத்தலாம் என அனுமதி வழங்கினர்.

இத்தகவலை அந்த வெளியீட்டில் உரையாற்றிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராஜாவே வெளியிட்டார்.

இந்த நிகழ்வு முதலில் புலனாய்வுப் பிரிவினரால் தடை செய்யப்பட்டபோதும் 3 மணி நேரத்தின் பின்னர் அனுமதிக்கப்பட்டமையால் இடம்பெறுகின்றது என அவர் அங்கு தெரிவித்தார்.



# தனிமைப்படுத்தலுக்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக விசாரணை!




கடந்த காலத்தில் சில ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலுக்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்புபவர்கள் அதிக கட்டணங்களுடன் ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்படுவதை நிறுத்தி அனைவரையும் இலவசமாக தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலுக்காக மக்களிடம் கட்டணம் வசூலிக்கப்படுவது தொடர்பாக விசாரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

# தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு உணவுகள் கிடைப்பதில் தட்டுப்பாடு!

## வவுனியா நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

வவுனியா பட்டாணிச்சூரில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு அக்கிராமம் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அங்கு வசிக்கும் மக்களுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வவுனியா நகரசபையின் உறுப்பினர்களான அப்துல் பாரி மற்றும் லரீப் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தின் நிலைமைகள் தொடர்பில் அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

எமது கிராமத்தில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் திடீரெனத் தனிமைப்படுத்தப்பட்டது.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அங்குள்ள 900 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் தற்போது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளனர்.

பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எந்த அதிகாரியும் எமது மக்களைப் பார்வையிடவில்லை. அவர்களுக்கான தேவைகள் தொடர்பாகவும் ஆராயவில்லை. குழந்தைகளுக்கு பால் மா மற்றும் வயோதிபர்களுக்கான உணவு மருத்துவம் என்பன பெரும் பாதிப்பாக உள்ளன.

எனவே தனிமைப்படுத்தப்பட்ட மக்களை மனிதாபிமானத்தோடு நோக்குங்கள். - எனத் தெரிவித்துள்ளனர்.

# இரத்தினபுரியில் கொரோனாத் தொற்று அச்சம்: பொது வைத்தியசாலையில் 3 வார்ட்கள் பூட்டு!

இரத்தினபுரி, ஜன.08

இரத்தினபுரி பொது வைத்தியசாலையின் 3 வார்ட்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் அனோஜ் ரொட்ரிகோ தெரிவித்தார்.

தமது வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்களுக்கு எழுமாற்றாக பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், வார்டொன்றில் பணிபுரியும் வைத்தியர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதுடன், அங்கு சிகிச்சை பெற்று வந்த 9 நோயாளர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வைத்தியசாலையின் 4 ஊழியர்களும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து குறித்த வார்ட் மூடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனைகளில் இதுவரை 15 ஊழியர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாகவும் வைத்தியர் கூறினார்.

இந்த நிலையில், தொற்றுடன் அடையாளம் காணப்பட்டோருடன் தொடர்புகளை பேணிய 101 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் தற்போது ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால், வைத்தியசாலையின் ஏனைய இரண்டு வார்ட்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன எனவும் இரத்தினபுரி பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# கொரோனா சிகிச்சை நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற நோயாளி கைதாகினார்!

பொலன்னறுவையில் கொரோனா சிகிச்சை நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற நோயாளர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆரச்சிக்கட்டு, ஆனை விழுந்தான் பகுதியில் வைத்து 52 வயதான இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் அந்த நபர் தலை மறைவாக இருப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

கல்லேல்ல கொரோனா சிகிச்சை நிலையத்திலிருந்து ஐவர் அண்மையில் தப்பிச்சென்ற நிலையில் அவர்களில் ஒருவர் மாதம்பை பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தார்.

தப்பிச் சென்ற ஏனைய மூவரை கைது செய்வதற்கான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என அஜித் றோஹண மேலும் தெரிவித்துள்ளார்.













இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.01.2021 இல் வெளியிடப்பெற்றது.